பக்கங்கள்:08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 22 திங்கட்கிழமை 05.06.2023 கதிர்207

## நீரில் மூழ்கி இருவர் உயிரிழப்பு

தெஹியத்தகண்டி, ஹெனானிகல தெற்கு பிரதேசத்தில் உள்ள ஆறு ஒன்றில் நேற்றுக் காலை நீராடிக்கொண்டிருந்த ஹபராதுவ பகுதியைச் சேர்ந்த பாடசாலைமாணவர் ஒருவர் உட்பட இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் என்று தெஹியத்தகண்டி ☞2

## தேர்தலை நிறுத்தியதற்கு எதிராக மற்றொரு வழக்கும் தாக்கலாகும்

### தயாராகின்றது ஜேவிபி

உள்ளூராட்சிமன்றத்தேர்தல்முறையற்ற வகையில்பிற்போடப்பட்டுள்ளமைக்குஎதிராக விரைவில்உயர்நீதிமன்றத்தில் மற்றொரு அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளததாகஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

கட்சி அலுவலகத்தில் நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டுமக்கள் தேர்தல் மற்றும் அரசியல் முறைமைமீதுநம்பிக்கைஇழந்துவிட்டார்கள் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். 2020 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியை மக்கள் அரசியலில் இருந்து முழுமையாக புறக்கணித்ததை ஜனாதிபதி மறந்து விட்டார்.

தேர்தல் ஒன்றை நடத்தாமல் எந்த அரசியல் தரப்புக்கும் 50 வீத பலத்தை பெற முடியாது என ஜனாதிபதியால் எவ்வாறு குறிப்பிடமுடியும். தேர்தல் ஒன்றை நடத்தினால் நாட்டு மக்கள் ரணில்- ராஜபக்ஷக்களுக்குத் தக்க பதிலடி கொடுப்பார்கள் என்பதை முன்கூட்டியதாக அறிந்துள்ள காரணத்தால்தான் இந்த ஆட்சி தேர்தலைக் கண்டு அச்சமடைகிறது.

நிதிநெருக்கடிகாரணமாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது என ஆட்சியாளர்கள் குறிப்பிடுவது அடிப்படையற்றதாகும். உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் தகவல் அறியும் ☞2

## இது ரகசியம் அல்ல!

வவுனியாமாவட்டம்நெடுங்கேணியில் உள்ள நயினாமடுப் பகுதியில் சீனித் தொழிற்சாலை ஒன்றை அமைப்பது தொடர்பில் காலைக்கதிர் பத்திரிகையில் நாம் வெளிப்படுத்தியிருந்தோம். அந்தச் செய்தி தொடர்பில் தற்போது ரெலோவின் சர்வதேசத் தொடர்பாளர் என்று கூறப்படும் சாம் சம்பந்தன் என்பவர் ஒரு விளக்கம் கொடுத்துள்ளார்.

புலயம்பெயர்ஊடகம்ஒன்றுக்குவழங்கிய செவ்வியில்அவர்கூறும்விளக்கத்தைஇங்கு தருகின்றேன். ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், நல்லாட்சிக் காலத்தில் குழுக்களின் பிரதித் தலைவராக இருந்தபோது, தமிழ் மக்களின் தற்சார்புப் பொருளாதாரம் சார்ந்து ஒரு திட்டத்தை முன்வைத்திருந்தார். இந்தத் திட்டம் குறித்து கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் கட்சியின் பேச்சாளர் சுரேன் குருசாமி விளக்கம் கொடுத்திருந்தார். ☞2

# புலம்பெயர்ந்தோரின் நிகழ்ச்சி நிரலுக்குள் சிக்கி மீண்டும் ஆயுதப்போருக்கு வழிசமைத்து விடாதீர்

## தமிழ்த் தலைவர்களிடம் அமைச்சர் அலி சப்ரி கோரிக்கை



தமிழ் அரசியல் தலைவர்கள் புலம்பெயந்தவர்களின் நிகழ்ச்சி நிரல்களுக்குள் சிக்கிக்கொண்டு மீண்டும் ஆயுதப்போருக்கு வழிசமைத்து விடாதீர்கள் என்று வெளிவிவகார அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான அலி சப்ரி பகிரங்கமாகக் கோரிக்கை விடுத்துள்ளார்.

பிரிவினை கோரி தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தியமையால் ஏற்பட்ட இழப்புக்களைத் தமிழ்த் தலைவர்கள் நன்றாகவே உணர்ந்துள்ளனர் எனவும் கூறியுள்ளார்.

தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் அரசாங்கம் அடுத்த கட்டமாக முன்னெடுக்கவுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் அண்மையில் ஊடகம் ஒன்றுக்குப் பிரத்தியேகமாகக் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வைக் காணவேண்டும் என்பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான ஆட்சி முனைப்புடன் உள்ளது.

ஜனாதிபதிரணில்காலத்தில்தேசியபிரச்சினை உள்ளிட்ட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் முழுமையான தீர்வைக் காண்பதற்கு மிகவும் அரிதானசந்தர்ப்பம்ஒன்றுஉருவாகியுள்ளது.

இதனைத் தமிழ்த் தலைவர்கள் ☞3

## எக்ஸ்பிரஸ் பேர்ள் இழப்பீட்டு வழக்கு சிங்கப்பூர் நீதிமன்றில் தாமதமாகும்



### இங்கிலாந்தில் மற்றொரு வழக்கு உள்ளதால் சிக்கல்

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் காப்பீட்டாளர்களால் பிரித்தானியாவில் தாக்கல் செய்யப்பட்டசேதநடவடிக்கை மீதான வரம்பு தொடர்பான வழக்கு, சிங்கப்பூரில் இலங்கைதாக்கல்செய்துள்ள இழப்பீடுகோரிக்கைவழக்கில் தாமதத்தை ஏற்படுத்தலாம் என்றுஎதிர்பார்க்கப்படுகிறது.

எனவே சிங்கப்பூரில் உள்ள உரிமைகோரல் நடவடிக்கையை முன்வைப்பது அல்லது இங்கிலாந்து வழக்கு முடிவடையும் வரை நீதிமன்றத்தை நீண்டகால தாமதம் செய்யுமாறு கோருவதுஉகந்ததுஎன்றுசட்டவல்லுநர்கள் அரசாங்கத்திடம் தெரிவித்துள்ளனர்.

இங்கிலாந்தில் உள்ள காப்பீட்டாளர்கள் தாக்கல் செய்த வழக்கு முடிவடையும் வரை, சிங்கப்பூரில் ☞2

## இலங்கைக்கு 4 கோடி 50 லட்சம் டொலர் கடனுதவி வழங்க உலக வங்கி இணக்கம்

இலங்கைக்கு சுமார் 450 மில்லியன் அமெரிக்க டொலர்களைகடனாகவழங்க உலக வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடனான சந்திப்பைஅடுத்தேஇந்தவருட இறுதிக்குள் இந்தக் கடனை வழங்கத் தீர்மானித்துள்ளது.

இதன் அடிப்படையில், உலக வங்கியின் நிபந்தனைகளைஇலகுவாக்கி4கோடியே 50 லட்சம் டொலர் கடனுதவி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அலுவலக பிரதானி சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும்தெரிவித்துள்ளதாவது:

நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கும் உலக வங்கியின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நீண்ட நாள்களாக நிதிச் சந்தையின் ஸ்திரத் தன்மையைப் பாதுகாத்தல் மற்றும்நாட்டின்பொருளாதார நிலைமைகளைச்சாதகமான முறைமையின் கீழ் கையாளுதல் போன்ற விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டு வந்தது.

மேலும், புள்ளிவிவரங்களுடன் தயாரிக்கப்பட்ட இருதரப்பு திட்ட வரைவு உலகவங்கிப்பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டது. ஆனால், பல்வேறுநிபந்தனைகளுடன் உலகவங்கியின் பிரதிநிதிகள் பேச்சுகளைத் தொடர்ந்தனர்.

இவ்வாறு நீண்ட கலந்துரை ☞2

## விமான நிலையங்கள் ஊடாக அரசுக்கு இலாபமே கிட்டுறது

### மேஜர் ஜெனரல் சந்திரசிறி தெரிவிப்பு

இலங்கையின் கட்டுநாயக்க மற்றும் மத்தள உட்பட அனைத்து விமான நிலையங்களையும் நிர்வகிக்கும் விமான நிலையம் மற்றும் விமான சேவை நிறுவனம் கடந்த வருடம் 27,647மில்லியன்ரூபாவை மொத்த இலாபமாக ஈட்டியுள்ளது.

வரி செலுத்திய பின்னர் அதன் இலாபம் 4,803 மில்லியன் ரூபா எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, 2022 ஆம் ஆண்டில், விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்து நிறுவனம் 1,983 மில்லியன் ரூபாவை அரசுக்கு வழங்கியுள்ளதாக அதன் வருடாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'மறுசீரமைப்பு எங்களைப் பாதிக்காது. அது ஶ்ரீலங்கன் ஏர்லைன்ஸைப் பாதிக்கலாம் ஆனால் அது விமான நிலையத்தையும் விமான சேவையையும் பாதிக்காது.

அதற்குக்காரணம்நாங்கள் அரசுக்கு சொந்தமான இலாபம் ஈட்டும் நிறுவனம். எங்கள்கடந்தஆண்டுலாபம் 6.5பில்லியன்ரூபாய். இந்த ஆண்டு எங்கள் இலக்கு 21.5 பில்லியன் ரூபாய் இலாபம். அதை எங்களால் ஈட்ட முடியும்' என விமான நிலையங்கள்மற்றும்விமான சேவைகள் நிறுவனத்தின் தலைவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார். (05)

## உள்ளூராட்சி மன்றங்களின் மேற்பார்வைக்கென தனிப் பிரதிநிதி நியமிக்க ஆணைக்குழு எதிர்ப்பு

உள்ளூராட்சி மன்றங்களின் மேற்பார்வைக்காக மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரின் சிறப்புப் பிரதிநிதி ஒருவரை நியமிக்கும் ஆட்சியாளர்களின் தீர்மானத்தில் தமக்கு உடன்பாடில்லை என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மாவட்ட அபிவிருத்திக் குழுத்தலைவர் ஓர் அரசியல் கட்சியின் பிரதிநிதியாக இருப்பதால், உள்ளூராட்சி மன்றங்களை மேற்பார்வை செய்வதற்கு அவரது பிரதிநிதியை நியமிப்பதன் மூலம் இந்த விடயம் அரசியலாக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு ☞2

## 33 கடைகளின் உரிமை மாற்றத்தினால் சாவா. நகர சபைக்கு ரூ 1 கோடி இழப்பு

### விசாரணை கோருகின்றது மாகாண உள்ளூராட்சி அமைச்சு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் சாவகச்சேரி நகர சபைக்குச் சொந்தமான 33 வர்த்தக நிலையங்களை உரிமை மாற்றம் செய்யப்பட்ட விடயத்தில் சபைக்கு ஒரு கோடியே 19 லட்சத்து 40 ஆயிரம் ரூபா சபை இழப்பு ஏற்பட்டுள்ளதாக மாகாணஉள்ளூராட்சிஅமைச்சின் செயலாளர் பிரதம செயலாளரின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளார். அது குறித்து விசாரணை நடத்தப்படவேண்டும்என்றும் அவர் கேட்டுள்ளார்.

சாவகச்சேரி நகர சபையின் செயலாளர் மற்றும் கணக்காளர் தெரிந்து கொண்டே சபைக்கு வருமான இழப்பை ☞2

## நாடு கடத்தப்படுகிறார் தவறாக நுழைந்த சீனர்

கடந்த மாதம் போலிக் கடவுச்சீட்டில்இலங்கைக்குள் நுழையமுயன்றபோதுகைது செய்யப்பட்ட சீனர் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளின் கீழ் நாடு கடத்தப்படவுள்ளார்.

போதைப்பொருள் தொடர்பான குற்றத்துக்காகத் தேடப்படும் இந்தச் சீனரை நாடு கடத்துவதற்கு பாதுகாப்புப் பணியாளர்களுடன் தனி விமானம் ஒன்றை வழங்குமாறு சீனத் தூதரகத்திடம் கோரப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் 18 ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்ட இந்தச் சீனரின் நடத்தையைக் கருத்திற்கொண்டே இந்த விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்குள் நுழைந்தபோது, மேற்கு ஆபிரிக்காவில்உள்ளகினியா நாட்டின்கடவுச்சீட்டுஅவரிடம் இருந்தது. அது போலி என்று கண்டுபிடித்த அதிகாரிகள் அவரை உடனேயே திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுத்தனர். ஆனால் இராஜாங்க அமைச்சர் ஒருவர் தலையிட்டு, அவர் ஓர் முதலீட்டாளர் என்று தெரிவித்து அவரை விடுவிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். அதனடிப்படையில் அவர் நாட்டுக்குள் நுழைய அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் செய்தி வெளியாகியதும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், இது குறித்து விசாரணை நடத்தி அந்தச் சீனரைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்தார். அதன் பின்னர் அவர் ☞2

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்குகிழக்குஎப்படிஅபிவிருத்தி அடையவேண்டும் என்று ரெலோவிடம் ஒரு விஷன் இருக்கிறது. அரசியலையும்பொருளாதார அபிவிருத்தியையும் பரவலாகக் கொண்டு செல்ல வேண்டும் என்று நாங்கள் நினைக்கிறோம். அதனடிப்படையில்தான்நல்லாட்சிக் காலத்தில் நான்கைந்து திட்டங்களைமுன்வைத்தோம். அதில் ஒன்றுதான் இந்தச் சீனித் தொழிற்சாலை.

இந்தச் சீனித் தொழிற்சாலை 500 மில்லியன் (ரூபாயா டொலரா என்று சொல்லவில்லை) முதலீட்டில் அமையும். இது தாய்லாந்து தொழில்நுட்பம், ஆனால் இதனுடைய முதலீட்டாளர்கள் ஐக்கிய இராச்சியத்தைச்(இங்கிலாந்து) சேர்ந்தவர்கள். இந்தத் திட்டம் வவுனியாவைச் சேர்ந்த 30 ஆயிரம் பேருக்கு நிரந்தர வேலைவாய்ப்பைவழங்கும். அத்தோடு வெறுங்காணிகள் எல்லைகளில் இருந்தால் அது சிங்களக் குடியேற்றங்களுக்குத்தான்வழிவகுக்கும். இதில கொடுக்கப்படவுள்ள காணிகளைப் போரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குப் பிரித்துக்கொடுப்பதற்கான அழுத்தத்தைத்தான் நாங்கள் கொடுப்போம்.

அதனால எங்கள் நிலத்தைத் தக்கவைக்க முடியும். அத்தோடு வேலை வாய்ப்பைக் கொடுப்பதால் நிலப்பரப்பின் செறிவை எல்லையில் கூட்டலாம். ஏற்கனவே ரெலோ வவுனியாவில் 6 கிராமங்களை உருவாக்கியிருக்கிறோம். எங்கள் தலைவர்மார் பெயர்களில் அவற்றை வைத்திருக்கிறோம்.

ஒரு சிலர் அரசியல் காழ்ப்புணர்வு காரணமாக, இந்தத் திட்டம் நிளைவேற்றப்பட்டால் தமது அரசியல் இருப்பு காணாமல்போய் விடும் என்பதற்காக எந்தவிதத்தரவும்இன்றிஇந்தச்செய்தி வெளியிடப்பட்டுள்ளது. ஒரு செய்தியை வெளியிடும்போது அது தொடர்பில் ஒரு ஆய்வைச் செய்யவேண்டும். அதைவிட்டுவிட்டு இதற்குள் சீனா வருகின்றது, சிங்களக் குடியேற்றம் வருகின்றது என்று சொல்வதெல்லாம் அடிப்படையற்றது.

இப்படித்தான்நாங்கள்75 வருடங்களாகக் கதைத்துக் கொண்டிருக்கின்றோம். அதனால் எங்கள் நிலங்களை இழந்து கொண்டிருக்கின்றோம். அதனால்எங்கள் மக்களைத் தக்க வைக்க வேண்டும் என்றால் தற்சார்புப் பொருளாதாரம் முக்கியம். அந்தத் தற்சார்புப் பொருளாதாரத்தை எப்படி அடையவேண்டும் என்கிறவிஷனைரெலோகொண்டிருக்கின்றது. அதன் ஒரு கட்டம்தான் இது. இப்படிப்பட்ட பல வேலைத் திட்டங்களை நாம் வைத்திருக்கின்றோம்.

இந்தவேலைத்திட்டத்தை அரசு ஏன் இப்போது எடுக்க வேண்டி வந்தது என்றால், சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்குக் கடன் கொடுக்கும்போது, உள்ளூர் உற்பத்திகள்தொடர்பாகப்பல முன்மொழிவுகள் வந்துள்ளன, ஆனால் நீங்கள் அவற்றுக்கெல்லாம் அனுமதி கொடுக்கவில்லை, நீங்கள் எங்களிடம் கடனைப் பெற்று சீனாவிடமும் மற்றைய நாடுகளிடமும் பெற்ற கடன்களைஅடைக்கிறீர்களேதவிர, உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கக்கூடிய எந்தவொரு திட்டத்திற்கும் நீங்கள் அனுமதி வழங்கவில்லை என்று கூறியிருக்கிறது. அதனால்தான் இந்தச்சீனித் தொழிற்சாலைத் திட்டத்தை அவர்கள் மீண்டும் கையில் எடுத்துள்ளார்கள்.

இந்தத் திட்டத்தை வடக்கில் செய்வதற்கு சிங்கள அமைச்சர்களுக்கு விருப்பமில்லை. அதைத் தெற்குக்குக் கொண்டு செல்லவேண்டும் என்றே அவர்கள் விரும்புகின்றார்கள். அப்படியிருந்தும், எமது தலைவர் செல்வம் அடைக்கலநாதன் குழுக்களின் பிரதித் தலைவராக இருந்த பதவியைப் பாவித்துத்தான் இந்தத் திட்டத்தை இங்கு திருப்பினோம் - என்றார்.

இந்தச் செய்தியைக் காலைக்கதிர்தான் முதன் முதலில் வெளியிட்டது. அது தொடர்பான பின்களத் தகவல்களையும் இந்தப் பத்தியில் வெளிப்படுத்தியிருந்தேன். அதன் பின்னர் இந்தத் திட்டத்தால் பிராந்திய அரசியல் இராஜதந்திரத்தில் ஏற்பட்டுள்ள பல அதிர்வுகளையும்கூட இதில் வெளிப்படுத்தியிருந்தேன். எல்லாவற்றுக்கும் மேலாக இந்தச் செய்தியை எழுதுவதற்கு முன்னர் அது குறித்து அதில்நேரடியாகத்தொடர்புபட்டிருந்தவரான சுரேன் குருசாமியுடன் எனது செய்தியாளர் நேரடியாகத்தொடர்புகொண்டு பேசியுமிருந்தார்.

செய்தியில் தெரிவிக்கப்பட்டதெல்லாம்,நயினாமடுவில் ஒரு சீனித் தொழிற்சாலை அமைக்கப்படுவதுதொடர்பான திட்டத்திற்குஅங்குள்ளமத்திய வகுப்பு'பெர்மிட்'காணிகளை வழங்கும்படிஜனாதிபதிரணில் விக்கிரமசிங்கஅதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கின்றார். இந்தக் கூட்டத்தில் வடக்கைச் சேர்ந்த சில தமிழ் அதிகாரிகளும் சுரேன் குருசாமியும் கலந்துகொண்டிருந்தனர் என்பதுதான். இந்தத் தொழிற்சாலை சீன முதலீட்டில் அமையவுள்ளது என்கிற தகவலும் அந்தச் செய்தியில் இருந்தது.

எனது செய்தியாளர் கேட்டபோது, நாம் இப்படிச் சில திட்டங்களை முன்னரே அரசிடம் கொடுத்திருந்தோம், அது தொடர்பில் ஏதும் ஆராயப்பட்டதோ தெரியாது, அப்படிநடந்திருந்தால்எமக்குத் தெரியப்படுத்தியிருப்பார்கள் என்று விளக்கம் சொன்னார். அத்தோடு அந்தக் கூட்டத்தில் தான் பங்கேற்கவேயில்லை என்றும் அடித்துச் சொன்னார். ஆனாலும் அவர் அந்த சூம் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தார் என்பதை அவரை நன்கு தெரிந்தவர்கள் உறுதிப்படுத்தினார்கள். சூம்கூட்டத்தில் கலந்துகொண்டிருப்பவர்களின் பெயர்கள் வரிசையில் அவரது சூம் ஐடி காணப்பட்டது மட்டுமல்ல திரையில் அவரது முகத்தையும்தான் கண்டனர் என்று பலர் எம்மிடம் உறுதிப்படுத்தியிருந்தனர். அதன் பின்னரே அந்தச் செய்தியை நாம் வெளியிட்டிருந்தோம்.

செய்திவெளியானஅன்றே எனது செய்தியாளருக்கு அழைப்பெடுத்த சுரேன் குருசாமி, நான்தான் அப்படி ஒன்றும் இல்லை என்று சொன்ன பிறகும் நீங்கள் செய்தியைப் போட்டிருக்கிறீர்களே என்று கேட்டாரே தவிர, அப்படி ஒரு தொழிற்சாலை அமைக்கப்படப் போகிறது, அதில் ரெலோவிற்குப் பங்கிருக்கின்றது என்ற எந்தக் கதையையும் அவர் தெரிவிக்கவில்லை.

அதற்குப் பதிலாக அவரது உள்ளீடுகளுடன் இணையத் தளம் ஒன்றில் எமது செய்திக்கான தெளிவுபடுத்தல்போன்ற ஒரு செய்தி வெளியிடப்பட்டது. அதில் நயினாமடுவில் சீனித் தொழிற்சாலையைஅமைக்க இருப்பது தாய்லாந்தில் பதிவு செய்யப்பட்டநிறுவனம்என்று தெரிவிக்கப்பட்டது. அத்தோடு அந்தத்திட்டத்துக்கானமூத்த துணைத்தலைவர் சுரேன் குருசாமிதான் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. அந்த அடிப்படையிலேயே அவர் கூட்டத்தில் பங்கேற்றார் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்தத் திட்டத்தின் மூலம் வடக்கின் எல்லையைக் காப்பாற்றலாம் என்கிற ரெலோவின் சிந்தனையையும் அந்தச் செய்தி வெளிப்படுத்தியிருந்தது.

அதற்கு மேலாக நாம் எமது செய்தியில் சுட்டிக் காட்டாத, இந்தத் திட்டம் குறித்து இந்தியா சந்தேகம் கொண்டுள்ளது, அது இதுபற்றி ஜனாதிபதியிடம் பேசியுள்ளது என்கிற விவரங்களையும், அதனால்காணிவிவகாரத்தில் ஜனாதிபதிபின்வாங்கிவிட்டார் என்றும் அந்தச் செய்தியில் மேலதிக தகவல்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன. நாம் செய்தி வெளியிட்ட மறுநாள் இந்தச் செய்தி மே 20 வெளிவந்தது.

எமதுசெய்திக்கும்சுரேன் குருசாமி மறுப்பு எதுவும் தெரிவிக்கவில்லை, அதற்கு மேலாக அவருக்கும் இந்தத் திட்டத்திற்கும் இருக்கும் நேரடித் தொடர்பு இருப்பதாக அந்த இணையத்தளம் வெளியிட்ட செய்ததிக்கும் சுரேன் எந்த மறுப்பும் தெரிவிக்கவில்லை. பின்னர் 10 நாட்கள் கழித்து கட்சியின் சர்வதேசத் தொடர்பாளர், அது தய்லாந்துத் தொழில்நுட்பம் ஆனால் முதலீட்டாளர்கள் இங்கிலாந்தைச்சேர்ந்தவர்கள் என்கிறார். இங்கிலாந்து முதலீட்டாளர்களுக்கு சீன தயாரிக்கும் தொழில்நுட்பம் தெரியாமல் தாய்லாந்திடம் ஏன் போனார்கள் என்றும் தெரியவில்லை, தாய்லாந்து நிறுவனமான சுடெக்ஸ் சுகர் இன்டஸ்ரி பிரைவேற் லிமிட்டெட் தான் இந்தத் திட்டத்தை முன்மொழிந்திருப்பதாகக் கூறப்பட்ட விவரம் சாம் சம்பந்தனுக்குத் தெரிந்திருக்கிறதோ இல்லையோ தெரியவில்லை. அடுத்த பேட்டியில் அவர் சிலவேளை இதற்கும் ஒரு காரணம், விளக்கம் கண்டுபிடித்துச் சொல்லக்கூடும்.

எல்லாவற்றுக்கும் மேலாக இந்தத் திட்டத்தின் மூலம் வவுனியாவைச் சுற்றியிருக்கும் 30 ஆயிரம் பேருக்கு நேரடி வேலை வாய்ப்பு கிட்டும் என்று ஒரு கதையையும்அடித்துவிட்டிருக்கிறார் சாம் சம்பந்தன். அப்படி நடந்தால் ஒரு தொழிற்சாலை மூலம் நேரடி மிக அதிகளவில் நேரடி வேலை வாய்ப்பு வழங்கப்பட்ட நிறுவனம் என்ற சாதனையை இந்த நிறுவனம் பெறும். வடக்கில் இதற்கு முன்னர் இருந்த பெரிய நிறுவனமான காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை அதிகபட்சமாக 3 ஆயிரம் பேருக்குத்தான் நேரடிமற்றும்இரண்டாம்நிலை வேலைவாய்ப்புக் கிட்டியது என்பதை மனதில்கொண்டு, இந்த நிறுவனம் எவ்வளவு பெரியதாக இருக்கும் என்பதைக் கணியுங்கள். அதாவது 30 ஆயிரம் பேருக்கு நேரடி வேலை வாய்ப்பே கிடைக்கும் என்றால் இரண்டாம் நிலை மற்றும்மறைமுகவேலைவாய்ப்புக்கள் மூலம் கிட்டத்தட்ட ஒன்றரை லட்சம் பேருக்கு வடக்கில் வேலை கிட்டும். கதையைச் சொல்லும் போது கொஞ்சமாவது நம்பும் படியானகதையாகயோசித்துச் சொல்லவேண்டும் சாம் சம்பந்தன். சும்மா அடித்து விடக்கூடாது. அப்படி விட்டு விட்டு ஊடகங்கள் ஆராய்ந்து செய்திஎழுதவேண்டும்என்று பாடம் நடத்த வரக்கூடாது.

ஊடகங்களின் பணி உண்மையைக் கிண்டிக் கிளறிவெளியேகொண்டுவருவதுதான். மொத்த உண்மையையும் ஒரேயடியாகக் கொண்டுவந்துவிட முடியாது. மெல்ல மெல்ல ஒவ்வொன்றாகத்தான் அவை வெளி வரும். கொண்டுவர முடியும். மொத்த உண்மையும் தெரிந்த பின்னர்தான் செய்து வெளியிடவேண்டும் என்றால் ரெலோ தலைவர் செல்வம் உட்பட எந்தத் தமிழ் அரசியல்வாதி சொல்வதையும் செய்தியாக வெளியிடமுடியாது. எதற்கும் ஆதாரம் வைத்துக்கொண்டு தமிழ் அரசியல்வாதிகள் உரையாற்றுவ தில்லைத் தானே! அதுமட்டுமல்ல இப்படித்தான் கடந்த 75 வருடங்களாக அரசியல் வாதிகள் மக்களை ஏமாற்றுகிறார்கள் என்றும் சாம் சம்பந்தனேஒப்புதல்வாக்குமூலம் வழங்கியிருக்கிறார். சீனா, சிங்களக் குடியேற்றங்கள் என்று மக்களை அரசியல் வாதிகள் ஏமாற்றி வந்திருக்கிறார்கள் என்கிறார்.

சீனித் தொழிற்சாலை விடயத்தில் சீனா உள்ளது என்று இந்தியாவிற்குச் சந்தேகம் என்று வெளியிட்டது ரெலோவின் பங்காளிக் கட்சியான புளொட்டுக்கு நெருக்கமான தரப்பு. இது விடயத்தில்சிங்களக்குடியேற்றம்குறித்து அறிக்கைவிட்டது ஈபிஆர்எல்எவ் கட்சி. ஆக மொத்தத்தில் ஜனநாயகக் கூட்டணிஎன்றுரெலோவோடு கூட இருக்கும் கட்சிகளுக்கே ரெலோவின் பொருளாதார விஷன் பற்றி ஒன்றும் தெரியவில்லை. சாம் சம்பந்தன் ரெலோவின் விஷன் குறித்து மற்றக் கட்சித் தலைவர்களுக்கு ஒரு வகுப்பெடுக்கவேண்டும். அப்போதுதான் இந்தியத் தூதரகத்தினரைச் சந்தித்துவிட்டு வந்து, ரெலோவின் சீனித் தொழிற்சாலை நடவடிக்கைக்குப்பிறகு இனி இந்தியா எங்களை நம்பவே நம்பாது என்றுதர்மலிங்கத்தாரின்ரை மகன் தன்னுடைய சகாக்களுக்கு சொல்லமாட்டார். அவருக்கு ரெலோவின் விஷன் விளங்கியிருந்தால் அப்படியொரு கதை சொல்லியிருப்பாரோ! நான் சொல்வது உங்களுக்குச் சரியென்று படுகிறதா வாசகர்களே!

**இடி மின்னல்**

## உள்ளூராட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக ஏனைய அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களுக்கு அநீதி இழைக்கப்படுவதாகவும் ஆணைக்குழு சுட்டிக் காட்டியது.

இதன்படி, ஆட்சியாளர்களின் இந்த யோசனைக்கு உடன்பாடு இல்லை என உள்ளூராட்சி அமைச்சுக்கு எழுத்து மூலம் அறிவிக்கவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களின் ஒருங்கிணைப்பு மற்றும் தேவையான தகவல்களை மாநகர ஆணையாளர் அல்லது சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றத்தின் செயலாளரிடம் பெற்றுக் கொள்ள முடியும் என ஆணைக்குழு தெரிவித்துள்ளது. எனவே, இதற்காக வேறு ஒரு பிரதிநிதியை நியமிக்க வேண்டிய அவசியமில்லை எனவும் தேர்தல் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

## புலம்பெயர்ந் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பது எனது கோரிக்கை. ஏனென்றால், புலம்பெயர் நாடுகளிலுள்ள தமிழர்கள் தரப்பினர் மற்றும் அவர்கள் சார்ந்த சக்திகளுக்கு மாறுபட்ட நிகழ்ச்சி நிரல்கள் உள்ளன.

புலம்பெயர்தரப்பினர் இலங்கையில் நிரந்தரமானதொருதீர்வைஏற்படுத்துவதற்கு இதயசுத்தியுடன் விரும்பவில்லை என்பது பல செயற்பாடுகள் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவர்கள் சார்ந்துள்ள நாடுகளில் அவர்களது வகிபாகத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்கான பலசெயற்பாடுகளை முன்னெடுக்கின்றார்கள்.

அவ்வாறான செயற்பாடுகளை இலங்கையிலுள்ள தமிழ் தலைவர்களை மையப்படுத்தி முன்னெடுக்கின்றார்கள். இந்த நிகழ்ச்சி நிரலுக்குள் தமிழ்த் தலைவர்கள் சிக்கிக்கொள்வதால் தமிழ் இளையோரின் எதிர்காலமே பாதிக்கப்படப் போகிறது என்பதை உணர்ந்துகொள்ள வேண்டியுள்ளது.

1977 ஆம் ஆண்டு நடைபெற்றபொதுத்தேர்தலில் அப்போதைய தமிழ்த் தலைவர்கள் தனிநாட்டுக்கான கோரிக்கையை முன்னிலைப்படுத்தினார்கள். ஆனால், அந்த தலைவர்களால்குறித்தகோரிக்கையை நிறைவேற்ற முடிந்திருக்கவில்லை. இதனால் அவர்களுக்கு எதிராகக் கிளம்பிய இளைஞர்கள், தலைவர்களால் செய்ய முடியாததைத் தாம் ஆயுத வழியில் நிகழ்த்திக் காண்பிப்போம் என்று புறப்பட்டார்கள்.

இந்தத் தீர்மானம் கடந்த 30 ஆண்டுகளாக நாட்டை சீர்குலைத்தது. அதிலும், தமிழ்மக்களையும், அவர்கள் வசிக்கும் பகுதிகளையும் மிகவும் மோசமாகப் பாதித்துவிட்டது. எனவே, குறித்த விடயத்தில் தமிழ் தலைவர்கள் ஒரு மனதுடன் தீர்மானங்களை எடுக்க வேண்டும்.

இந்தஆட்சியைப்பொறுத்தவரையில்பொறுப்புக்கூறல், அதிகாரப்பகிர்வு ஆகிய விடயங்களில் சம்பந்தமாகப் பேச்சுகளை முன்னெடுப்பதற்குத்தயாராகவேஉள்ளது. தொடர்ச்சியான பேச்சுகள் நடத்தப்பட்டு, படிப்படியாக விடயங்கள் தீர்க்கப்படுவதற்கே நாமும் செயற்படுகின்றோம்.

ஜனாதிபதி தலைமையிலான ஆட்சி, அரசியல் கைதிகள் விடயத்தில் சாதகமான சமிக்ஞையை வெளிப்படுத்தியுள்ளது. எஞ்சிய சொற்ப அளவிலானவர்களை விடுவிப்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று தான் காணிகளை வனப்பாதுகாப்பு திணைக்களம், தொல்பொருள் திணைக்களம் உள்ளிட்டவை கையகப்படுத்துவதாகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பிரச்சினை அனைத்து சமூகங்களுக்கு மானதாக உள்ளது. ஆகவே, அந்த விடயமும் உரிய அணுகுமுறையூடாகத் தீர்க்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நாம் உள்ளோம்.

முன்னதாக, நான் நிதியமைச்சராகக் கடமையாற்றியபோது, காணாமலாக்கப் பட்டவர்களுக்கான இழப்பீடுகளை வழங்குவதற்கு வடக்கு, கிழக்கில் நடவடிக்கைகளை எடுத்திருந்தேன். எனினும், அதற்குச் சிறியகுழுவினர்கள்எதிர்ப்பை வெளியிட்டார்கள்.

அதேநேரம், மாற்றுத் திறனாளிகளாக உள்ள முன்னாள் போராளிகளுக்கு உண்மையிலேயே உதவிகள் தேவையாக உள்ளன. ஆட்சியாளர்களால் அளிக்கப்படுகின்ற பகுதியளவிலான உதவிகளைப் பெற்று, வாழ்க்கையை முன்னகர்த்துபவர்களும் உள்ளார்கள். எனவே, ஆட்சி என்ற வகையில் ஐக்கிய இலங்கைக்குள் அனைவரும் சமத்துவமாகவும், சமாதானமாகவும் வாழ வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளோம்.

இந்த விடயத்தில் தமிழ் தலைவர்களும் ஒன்றிணைய வேண்டும் எனக் கூறியுள்ளார். (05)

## நீரில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவத்தில் 17 மற்றும் 19 வயதுடைய இருவர் உயிரிழந்துள்ளனர்.

தெஹியத்தகண்டி, ஹெனானிகலபிரதேசத்துக்கு சனிக்கிழமை பேருந்தில் 50 பேர் கொண்ட குழுவினர் சுற்றுலா வந்த சமயம் இந்த விபத்து நிகழ்ந்ததாகப் பொலிஸார்தெரிவிக்கின்றனர்.

அவர்களில் இருவர் நேற்றுக் காலை ஆற்றில் நீராடிக்கொண்டிருந்தபோது நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இதனைக்கண்டு, ஏனையவர்கள் அலறிய சத்தம் கேட்டு பிரதேசவாசிகள் அங்கு சென்று, இரு இளைஞர்களையும் மீட்டு தெஹியத்தகண்டி வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். ஆனால் அவர்களைக் காப்பாற்ற முடியவில்லை.

## எக்ஸ்பிரஸ் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள உரிமைகோரல் நடவடிக்கைகளைத்தொடர்வது பாதகமானதாக இருக்கும் என்று சட்ட வல்லுநர்கள் இலங்கை அதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ளனர்.

கடல்சார் உரிமை கோரல்களுக்கான பொறுப்பு வரம்பு குறித்த சாசனத்தின் கீழ் லண்டனில் உள்ள வணிக மேல் நீதிமன்றத்தில் காப்பீட்டாளர்கள் வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர்.

இலங்கையில்நேர்ந்தமிக மோசமான கடல்சார் பேரழிவு தொடர்பாக செலுத்தப்படக் கூடிய சேதங்களை குறைக்க காப்பீட்டாளர்கள் எடுக்கும் முயற்சிகளில் ஒன்றாகவே இது அமைந்துள்ளது.

எனினும் இங்கிலாந்து வழக்கையும் எதிர்த்துப் போராட இலங்கை அரசாங்கம் உறுதியுடன் இருப்பதாக நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தில் வழக்கை விரைவில் முடிக்க இலங்கை விரும்புகிறது.

கப்பல் உரிமையாளரின் அலட்சியமே சோகத்திற்கு வழிவகுத்தது என்பதை இலங்கையால் நிரூபிக்க முடியும் என்றும் விஜயதாஸ ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக, காப்பீட்டாளர்கள் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், இலங்கை அரசாங்கத்தின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்த இங்கிலாந்தில் உள்ள ஒருசட்ட நிறுவனத்தை ஈடுபடுத்த வேண்டும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, இந்த விவகாரத்துக்காக அமைச்சரவையின் ஒப்புதல் தேவைப்படும் என்றும், இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் விரைவில் சமர்ப்பிக்கப்படும் என்றும்அமைச்சர்தெரிவித்துள்ளார். (05)

## நாடு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சீனாவில் தேடப்படும் நபர் என்று அந்த நாட்டுத் தூதரகம் அறிவித்தது.

இந்த நிலையில் குறித்த சீனரை எதிர்வரும் புதன்கிழமை அல்லது வியாழக்கிழமை நாடுகடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது என்று குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் ஹர்ஷ இலுக்பிட்டிய, தெரிவித்தார்.

அவரை நாடு கடத்துவதற்கான வழிவகைகளை ஏற்பாடுசெய்யதிணைக்களம் சீனாவுடன் பேச்சு நடத்தி வருகின்றது எனவும் கூறியுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள சீனர், தற்போது வெலிக்கடை இடைநிலை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக குறித்த சீனரைநாடுகடத்துவதற்கான உத்தரவை ரத்து செய்ய உத்தரவிடக் கோரி கடந்த வாரம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஒரு நீதிப் பேராணை மனு தாக்கல் செய்யப்பட்டது.

எனினும் கடந்த திங்கட்கிழமை இந்த மனு நிராகரிக்கப்பட்டது. நீதிமன்ற விசாரணையின்போது, 2019 ஆம் ஆண்டில் போதைப் பொருள் தொடர்பான குற்றத்திற்காக லிபான் என அடையாளம் காணப்பட்ட குறித்த சந்தேகநபரை கைது செய்ய சீன நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளமை தெரியவந்தது.

இருப்பினும், லி தனது நாட்டை விட்டு வெளியேறி விட்டார். இதனையடுத்தே அவர் கினியா கடவுச்சீட்டைப் பயன்படுத்திடுபாயில் இருந்து இலங்கைக்கு வந்துள்ளார்.

சீன நாட்டவர் சீன அரசாங்கத்தால் தேடப்படும் குற்றவாளி என்றும், எனவே அவரை சீனாவுக்குத் திரும்ப அழைத்துச்செல்லவேண்டும் என்றும் சீனத் தூதரகம் கூறியது.

அவரை வேறு நாட்டுக்கு அனுப்ப வேண்டாம் என்றும்தூதரகம் கேட்டுக்கொண்டது. இந்தநிலையில்இலங்கையின் குடிவரவு அதிகாரிகள் தன்னைத் தாக்கினர் எனக் குற்றஞ்சாட்டி லி முறையிட்டிருந்தார்.

இருப்பினும், சட்டமருத்துவப் பரிசோதனையில், காயங்கள் பல் துலக்கியதன் காரணமாக சுயமாக ஏற்படுத்தப்பட்டவை என்பது தெரியவந்தது. (05)

---

உரிமைச்சட்டம் ஊடாகப் பல விடயங்களைப் பெற்றுக் கொண்டுள்ளோம்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்வாக்கெடுப்பைகடந்த ஏப்ரல் 25 நடத்த தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்தது. தேர்தல் நடவடிக்கைகளுக்கு 246 கோடி ரூபா தேவை எனத் தேர்தல்கள் ஆணைக்குழு கடந்த மார்ச் மாதம் ஏழாம் திகதிதிறைசேரியின்செயலாளரிடம் உத்தியோகப்பூர்வமாக கோரிக்கை விடுத்தது.

தேர்தல்கள் ஆணைக் குழுவின் கோரிக்கைக்கு திறைசேரியின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன 'நிதி விடுவிப்பு தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கையை விடய தானத்துக்கு பொறுப்பான அமைச்சருக்கு அறிவுறுத்தியுள்ளேன். சாதகமான பதில் கிடைத்ததும் தேவையான நிதி விடுவிக்கப்படும் என மார்ச் ஏழாம் திகதி தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு எழுத்து மூலமாக அறிவித்தார்.

வாக்கெடுப்புக்குத் தேவையானநிதியை தேர்தல்கள் ஆணைக்குழு ஒரே கட்டமாக கோரவில்லை. கட்டம் கட்டமாகவே கோரியுள்ளது. இவ்வாறான பின்னணியில் தேர்தல்நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதியை விடுவிக்க அரச வருமானம் போதுமானதாக இல்லை, கையிருப்பில் ரூபா இல்லை என நிதியமைச்சு குறிப்பிட்ட கருத்தை தகவலறியும் உரிமைச் சட்டம் பொய்யாக்கியுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 17,790 கோடி ரூபா வருமானத்தை நிதியமைச்சு ஈட்டியுள்ளது. அரசசெலவுகளுக்காக 15,676 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன் 2,141 கோடி ரூபா சேமிக்கப்பட்டுள்ளது. பெப்ரவரி மாதம் 27175 கோடிரூபாவருமானம் கிடைக்கப் பெற்றுள்ளதுடன் 20862 கோடி ரூபா அரச செலவுகளுக்காக ஒதுக்கப்பட்டு 6313 கோடி ரூபா சேமிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் அரச செலவுகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டதன் பின்னர் 8427 கோடி ரூபாமிகுதியாகியுள்ளது. மார்ச் மாதம் 25 ஆம் திகதி உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்த தேசிய தேர்தல்கள் ஆணைக்கு 246 கோடி ரூபாவை மாத்திரம் கோரியுள்ளது. அரசாங்கத்துக்கு வாக்கு இல்லாத காரணத்தால் நிதி இல்லை என்று குறிப்பிட்டுக் கொண்டு உள்ளூராட்சிமன்றத் தேர்தல் காலவரையறையின்றிபிற்போடப்பட்டுள்ளது.

பொய்யானகாரணிகளை குறிப்பிட்டுக் கொண்டு இந்த ஆட்சி உள்ளூராட்சிமன்றத் தேர்தலை பிற்போட்டுள்ளது. ஆகவே அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்வரும் வாரம் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்யவுள்ளோம் -என்றார்.

## இலங்கைக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாடல்களின் பின்னர் நிபந்தனைகள் சிலவற்றை இலகுவாக்கி 450 மில்லியன் டொலர் நிதி உதவிக்கு உலக வங்கி ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த நிதி உதவி வருட இறுதிக்குள் கிடைக்கும் - என்றார். (05)

## 33 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்தியுள்ளனர் என்று குற்றஞ்சாட்டியுள்ள அமைச்சு செயலாளர் விசாரணைக்குப் பரிந்துரைத்துள்ளார்.

எந்தவொருதிணைக்களத் தலைவர்களிற்கும் தெரியாது நகர சபையின் தவிசாளரும் சட்டத்தரணியும் உரிமை மாற்றம் செய்தமையினால் சபை பெரும் தொகை வருமானத்தை இழந்துள்ளதாக அறிக்கையில் சுட்டிக்காட்டப்படுவதோடு உரிமைமாற்றத்திற்கான எந்தவொரு விதி முறையும் பின்பற்றப்படவில்லை எனவும் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இவ்வாறு நகரசபையின் சொத்து உயர் அதிகாரிகள் எவரது அனுமதியும் இன்றி கைமாற்றம் செய்யப்பட்டமை தொடர்பில் சபையின் செயலாளர் மற்றும் கணக்காளர் பொறுப்புக்கூறவேண்டும் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சாவகச்சேரிநகரசபைக்கு உரிய சொத்தான 30 வர்த்தக நிலையங்கள் நீண்ட காலத்

**தொடர்ச்சி மூன்றாம் பக்கம்**

காலைக்கதிர் Kalaikkathir

**33 ....**

(இரண்டாம்பக்கத்தொடர்ச்சி)

திற்கு முன்பே வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றைப் பெற்றவர்கள் சபையின் அனுமதி இன்றி வேறு வர்த்தகர்களிற்கு அவற்றைக் கை மாற்றி வர்த்தகம்நடத்திவருகின்றனர். இவ்வாறு கை மாற்றப்பட்ட வர்த்தக நிலையங்களை தற்போது நடத்தும் உரிமை யாளர்கள் தமது பெயரில் உரிமை மாற்றம் செய்து தருமாறும் நகர சபையை கோரியுள்ளனர்.

1980/46 ஆம் இலக்க சுற்றறிக்கையில் உரிமை மாற்றத்தின்போது 20 ஆண் டுகால வாடகைப் பணத்தை முற்பணமாகப்பெறவேண்டும் எனக் கூறப்பட்டுள்ளபோதும் அந்த நடைமுறை பின்பற்றப் படவில்லை எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதேநேரம் சபையின் சொத்தைப் பிறறின் பெய ரில்உரிமைமாற்றம்செய்யும் போது இறைவரியாக ஒரு தொகை நிதி அறவிடப் படுவதனால் கண்டிப்பாக மாகாண உள்ளூராட்சி அமைச்சரின் அனுமதி பெறப்படவேண்டும் என்பது பொது நடைமுறை.

இவ்வாறேயாழ்ப்பாணம் மாநகர சபை மற்றும் வலிகாமம் தெற்கு பிரதேச சபைகளில் இருந்த வர்த்தக நிலையங்களைத் தற்போது கடை நடத்துபவர்களின் பெயரில் உரிமை மாற்றம் செய்யமாகாணஉள்ளூராட்சி அமைச்சர் என்ற வகையில் அப்போதைய முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் அனுமதிக்குஅனுப்பியபோது 20வருடவாடகைப்பணத்தை முற்பணமாகப்பெறுவதோடு ஒருவர்பெயரில்ஒருகடையை மாத்திரம் வழங்கலாம் என்ற பரிந்துரையுடன் அனுமதித்திருந்தார்.

சாவகச்சேரிநகரசபையில் கை மாற்றப்பட்ட வர்த்தக நிலையங்களிற்குஉள்ளூராட்சி அமைச்சரதோ அல்லது ஆளுநரின் அனுமதியோ மட்டுமல்ல குறைந்த பட்சம் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் அனுமதி கூடப் பெறப்பட வில்லை.

இவ்வாறு எவரது அனுமதியும் பெறப்படாது உரிமைமாற்றம்செய்யப்பட்ட கடைகளில் இருவருக்குதலா 3 கடைகளும், இருவ ருக்கு இரு கடைகளும் வழங் கப்பட்டுள்ளன.மட்டுமன்றிஇரு அரசஉத்தியோகத்தர்களிற்கும் கடைகள்வழங்கப்பட்டுள்ளன.

இவை அனைத்திற்கும் மேலாகச் சபையின் சொத்தை சபை வழங்கிய உரிமையாளர்களிடம் இருந்து சபையின் அனுமதியின்றிப் பெற்று வர்த்தகம் நடத்துகின்றனர் என்று தெரிவித்து 4 வர்த்தக நிலைய உரிமையாளர் மீது சபை நீதிமன்றில் 2023 ஆம் ஆண்டுஜனவரியில்50லட்சம் ரூபா முற்பணமும் 50 லட்சம் ரூபா குற்றப் பணமும் கோரி வழக்குத் தொடுத்துள்ளது.

இவ்வாறு வழக்குத் தொடுக்கப்பட்ட வர்த்தக நிலையத்தின் உரிமையா ளர்களில் ஒருவர் சபையை நேரில் அனுகி சமரசமாக 20 வருட வாடகையை முற்ப ணமாகவும் 10 லட்சம் ரூபா வைக் குற்றப்பணமாகவும் செலுத்தியதன் மூலம் நீதிமன்றத் தீர்ப்பின் முன்பே அவர் தொடர்பான வழக்கு முடிவுறுத்தப்பட்டுள்ளது.

இருந்தபோதும் 10 ஆண்டுகால முற்பணத்துடன் கடைகளை உரிமை மாற்றம் செய்யலாம் என்ற சபையின் தீர்மானத்தை காண்பித்து கடை உரிமையாளர் வைப்புச் செய்த 20 ஆண்டுக்கான முற் பணத்தில் 10 ஆண்டுக்கான பணம் சபையினால் மீள வழங்கப்பட்டுள்ளதோடு வழக்கும் கை வாங்கப் பட்டுள்ளது.

இவ்வாறெல்லாம் சாவகச் சேரிநகரசபையில்இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில சபையின் செயலாளரான சீராளனைத்தொடர்புகொண்டு கேட்டபோது,

2023 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் மக்களால் தேர்வு செய்யப்பட்ட சபை இயங்கிய காலத்தில் சபையில் வர்த்தக நிலையங்களின் உரிமை மாற்றம் தொடர்பான விடயம் எடுத்தபோது 10 ஆண்டுகீமணியுடன்தற்போது கடை நடாத்துபவர்களிற்கு கடைகளை உரிமை மாற் றம் செய்யலாம் எனவும் வழக்குத் தொடர்ந்த நால்வர் விடயத்திலும் இது பொருந்தும்எனவும்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அந்தத் தீர்மானத்தை அடிப்படையாக்கொண்டு 30 கடைகளும் சபையின் தவிசாளரும் சபையின் சட்டத்தரணியும் ஒப்பமிட்டு அனுமதித்ததன் பெயரில் வர்த்தகர்களின் பெயரில் உரிமை மாற்றம் செய்யப் பட்டது.

இதே நடைமுறையி னையே கடந்த காலத்திலும் மேற்கொண்டுள்ளதனால் இவ்வாறே பின்பற்றுங்கள் என வர்த்தகர்களும் கோரி நின்றனர் - என்றார்.

பெப்ரவரி மாத சபைக் கூட்ட அறிக்கை உள்ளூராட்சி ஆணையாளரிற்கு அனுப் பப்பட்டதா 20 வருட முற்பண மும் 10 லட்சம் ரூபா குற்றப் பணமும் செலுத்தியவருக்கு அரைவாசிமுற்பணத்தைமீள வழங்க மாகாண ஆளுநரின் அனுமதி பெறப்பட்டதா அதேபோன்று அந்தப் பணத் தினை காசோலையாக வழங்கும்போது அந்த காசோலையில் யார் ஒப்ப மிட்டவர் எனக் கேட்கப்பட்டது.

காசோலையில் நானே ஒப்பமிட்டேன். அந்தவர்த்தகர் 20 வருட கீ மணியினையும் 10 லட்சம் ரூபா குற்றப் பண மாகவும் செலுத்தியபோது அதனை வைப்பு பணமாக ஏற்றமோ அன்றி சபை யின்வருமானமாககணக்கிடப் படாமையினால் எவரது அனுமதியும் இன்றி அது திரும்ப வழங்கப்பட்டது - என்றார்.










காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மனிதனின் கட்டாயக் கடமை

**இன்று சுற்றுச் சூழல் தினம். நாம் வாழும் பூமியையும்அதன்இயற்கையையும்பாதுகாப்பதற்குத் தேவையானவிழிப்புணர்வை மனிதர்களிடம் உலகம் முழுவதும் ஏற்படுத்தும் நோக்கத்தோடு ஐக்கிய நாடுகள் பேரவையால் அறிவிக்கப்பட்டது இந்த நாள். ஒவ்வொரு ஆண்டும் ஆனி மாதம் 5ஆம் நாள் இந்தத் தினம் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.**

**மனிதன் இயற்கையின் ஒரு சிறு பகுதி. ஆனால் மற்றெந்தப்பகுதியையும்விட இயற்கைக்குஆபத்தைப் பெருமளவில் விளைவிப்பவனாகவும் மனிதனே இருக்கின்றான். மற்றெல்லா உயிரினங்களும் இயற்கையோடு இயைந்து அதற்கு அடிபணிந்து வாழும்போது, மனிதன் மட்டுமே இயற்கையை மீறி வாழக்கற்றுக்கொண்டிருக்கின்றான். அதுமட்டுமல்ல இயற்கையைமிகமோசமாகச்சேதப்படுத்துவதற்கும் கற்றுக்கொண்டிருக்கின்றான்.**

**மனிதன் இப்படி இயற்கையை அழிப்பதால், சேதப்படுத்துவதால், இயற்கையை மீறி நடப்பதால் ஏற்படும் விளைவுகளையும் பின்னர் இந்த உலகிலுள்ள அனைத்து உயிர்களும் அனுபவிக்கவேண்டியிருக்கின்றது, மனித உட்பட. இன்று புவி வெப்பமாதல் மூலம் உலகம் எதிர்கொண்டிருக்கும் ஆபத்துக்களுக்கும் மனிதனே அடிப்படையானவன். இந்த நிலையை எதிர்காலத்திலாவது நிவர்த்தி செய்வதற்காகத்தான் சுற்றுச் சூழல் தினம் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்த முயற்சிக்கப்படுகின்றது.**

**இந்த ஆண்டு பிளாஸ்ரிக் எனப்படும் நெகிழிப் பயன்பாட்டைக் கட்டுப்படுத்துவது சுற்றுச்சூழல் தின தொணிப்பொருளாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.**

**உலகளவில்ஒவ்வொரு ஆண்டும் 400 மில்லியன் டன்களுக்கும் அதிகமான பிளாஸ்டிக் உற்பத்தி செய்யப்படுகிறது, அதில் பாதி ஒரு முறை மட்டுமே பயன்படுத்தவென்றே வடிவமைக்கப்படுகின்றது. அதில், 10 சதவீதத்திற்கும் குறைவாகவே மறுசுழற்சி செய்யப்படுகிறது.**

**ஆண்டுக்கு19–23மில்லியன்டன்பிளாஸ்ரிக்குகள் ஏரிகள், ஆறுகள் மற்றும் கடல்களில் சேருகின்றன. இது அண்ணளவாக 2,200 ஈபிள் கோபுரங்களின் எடை.**

**மைக்ரோ பிளாஸ்டிக்ஸ் – 5 மிமீ விட்டம் கொண்ட சிறிய பிளாஸ்டிக் துகள்கள் – உணவு, நீர் மற்றும் காற்றுக்குள் நுழைகின்றன. பூமியில் உள்ள ஒவ்வொரு நபரும் வருடத்திற்கு 50,000 பிளாஸ்டிக் துகள்களுக்கு மேல் உட்கொள்கிறார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது –**

**தூக்கி எறியப்பட்ட அல்லது எரிக்கப்படும் ஒருமுறை பயன்படுத்தும்பிளாஸ்டிக்மனிதஆரோக்கியத்திற்கும் பல்லுயிர் பெருக்கத்திற்கும் தீங்கு விளைவிக்கிறது மற்றும் மலை உச்சியில் இருந்து கடல் தளம் வரை உள்ள ஒவ்வொரு சுற்றுச்சூழல் அமைப்பையும் மாசுபடுத்துகிறது. பாதிக்கின்றது.**

**சிக்கலைச் சமாளிப்பதற்கான அறிவியலை மேலும்பலப்படுத்துவதுடன் அரசுகள், நிறுவனங்கள் மற்றும் பிற பங்குதாரர்கள் இந்த நெருக்கடியைத் தீர்க்கத் தமது முயற்சிகளை அதிகரிக்க வேண்டும் மற்றும் அவற்றை விரைவுபடுத்தவேண்டும் என்று யுனெஸ்கோ வலியுறுத்துகின்றது.**

**நாம் ஒவ்வொருவரும் அதற்கு உதவவேண்டும். அது இந்தப் பூமியில் பிறந்த ஒவ்வொரு மனிதனதும் கடமை.**

# பிளாஸ்ரிக் மயமாகிறது மனித உடல் விழித்துக் கொள்ளாதுவிடில் விபரீதம்

## சூழல் தின அறிக்கையில் பொ. ஐங்கரநேசன் எச்சரிக்கை



எங்கு பார்த்தாலும் பிளாஸ்ரிக் மயமாகிவரும் உலகில் மனித உடலும் பிளாஸ்ரிக் மயமாகிக் கொண்டிருக்கிறது. காற்றிலும்நீரிலும் நிரம்பியுள்ள பிளாஸ்ரிக் நுண்துகள்கள் சுவாசத்தின் மூலமும்உணவின்மூலமும் மனித உடலினுள் நுழைந்து நுரையீரலிலும் உள் இழையங்களிலும் தேங்கி வருகிறது.

இவ்வாறு வாரமொன்றுக்கு 5கிராமளவுப்பிளாஸ்ரிக் நுண்துகள்கள் மனித உடலைச் சென்றடைந்து கொண்டிருக்கின்றன என மருத்துவ விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். பலநூறு இரசாயனங்களின் சேர்க்கையால் ஆன பிளாஸ்ரிக் நுண்துகள்கள் தொடர்பாக விழித்துக் கொள்ளாவிடில் சுவாசக் கோளாறுகள் முதல் புற்று நோய்கள் வரை பல்வேறு விபரீதங்களை எதிர் கொள்ள நேரிடும்என்றுதமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.

ஆண்டுதோறும் சுற்றுச்சூழல்தினம்ஜூன்5ஆம் திகதி இன்று (திங்கட்கிழமை) உலகளாவிய ரீதியில் கடைப் பிடிக்கப்படுகிறது. இத்தினத்தை முன்னிட்டுபொ. ஐங்கரநேசன் விடுத்திருக்கும் ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு எச்சரித்துள்ளார்.

அந்தஊடகஅறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

பிளாஸ்ரிக் மனுக்குலத்துக்குப் பெறுமதியான பல பயன்களைத் தந்து கொண்டிருந்தபோதும், கூடவே சீர்செய்ய முடியாத பல மோசமான பாதிப்புகளையும் ஏற்படுத்தி வருகிறது. இயற்கைப் பொருள்கள் யாவும் காலவோட்டத்தில் உக்கிக் கரைந்துபோக, செயற்கைப் பிளாஸ்ரிக் மட்டும் அதன் பிரம்மாவான மனிதனிடம் சாகாவரம் வாங்கி வந்துள்ளது. காலன் இல்லாததால் கழிவுகளாக மலைபோலக் குவிந்து சூழலுக்குத் தாங்கொணாத உபாதைகளை ஏற்படுத்தி வருகிறது. இன்று நிலம், நீர், காற்று என்று இயற்கையின்



மேனி முழுவதும் பிளாஸ்ரிக் கழிவுகளின் கோரப் பற்கள் ஆழப்பதிந்துள்ளன.

பிளாஸ்ரிக் கழிவுகள் நிலத்தைப் போர்த்தி மண்ணினுள் மழைநீர் இறங்குவதை அனுமதிக்காததோடு காற்றுப்புகுவதையும்தடைசெய்கிறது. பிளாஸ்ரிக் கழிவுகளை உயிரினங்கள் உணவோடு சேர்த்தும், உணவென நினைத்தும் விழுங்குவதால் தரையில் யானைகள் முதல் கடலில் மீன்கள் வரை பல மில்லியன் கணக்கான உயிர்கள் ஆண்டுதோறும்அற்பஆயுளில் பலியாகி வருகின்றன.

பிளாஸ்ரிக் கழிவுகளை எரிப்பதால் வெளிவரும் கொடும் டையொக்சின் வாயு மனிதர்களை மலடாக்கி வருகிறது. தற்போதுபிளாஸ்ரிக் கழிவுகள் நுண்துகள்களாக மனிதஉடலினுள்ளும்தேங்க ஆரம்பித்துள்ளன.

பிளாஸ்ரிக்கின் நல்லாட்சியைவிடச் சமநிலையைச் சீர்குலைத்து இயற்கையைச் சாகடிக்கும் அதன் வல்லாட்சியே மேலோங்கியுள்ளது. இதனாலேயே ஐக்கிய நாடுகள் சபை 2023 ஆம் ஆண்டின் சுற்றுச்சூழல்தினக் கவனக்குவிப்பாகப்'பிளாஸ்ரிக் மாசைத் தோற்கடிப்போம்' என்ற கருப்பொருளைத் தேர்வு செய்துள்ளது. முற்றுகையிட்டிருக்கும் பிளாஸ்ரிக் கழிவுகளில் இருந்து இயற்கையையும் எம்மையையும் உடனடியாக மீட்டெடுப்பது இலேசானதொன்றல்ல. எனினும், அதன் தாக்குதல்களின் வீரியத்தைக் குறைக்கவல்ல வியூகங்களையேனும் வகுக்கவேண்டிய கட்டாய நிலைக்கு இன்று நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

தேவையற்ற பிளாஸ்ரிக் பொருள்களைவாங்குவதைத் தவிர்ப்பது எம்முன்னால் உள்ள முதற்தெரிவாகும். இயன்றவரை நீண்டகாலம் பயன்படுத்துவது, கழிக்க முன்னர் இன்னொருமுறை பயன்படுமா என்று சிந்திப்பது, கழிவுகளில் இருந்து பிளாஸ்ரிக்கைப் பிரித்தெடுப்பது போன்ற கழிவு மேலாண்மைகளையும்கையில்எடுக்க வேண்டும். கூடவே, ஒருநாள் பயன்படுத்தித் தூக்கி வீசும் பிளாஸ்ரிக்குக்கு மாற்றாகக் கடதாசி, துணி, இலைகள் போன்றவற்றினாலான இயற்கைப்பொருள்களுக்குத் தாமதமின்றித் திரும்பவேண்டும். தவறின் பிளாஸ்ரிக் அதனைப் பிரசவித்த மனுக்குலத்தையே விரைவில் தின்று செரித்து விடும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (05)

# பர்தா விவகாரம் குறித்து பரீட்சை மண்டப அதிகாரிகள் மாணவிகளுக்கு முறையாகத் தெளிவுபடுத்தவேண்டும்

## இம்ரான் எம்.பி. கோரிக்கை



ஹுஸ்பர்

க.பொத. சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றும் முஸ்லிம் மாணவிகள் பர்தா தொடர்பிலான விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு நடக்க தயாராக இருக்கிறார்கள். எனினும், பரீட்சை மண்டப அதிகாரிகள் மாணவிகளின் மனநிலையைப் புரிந்துகொண்டு அவர்களை முறையாகத் தெளிவுபடுத்தவேண்டும்எனதிருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சக்தியின் உதவிச் செயலாளருமான இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு இது தொடர்பில்வெளியிட்டுள்ளஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது .

சாதாரணதரப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவிகளுக்கு பரீட்சை மண்டபத்தில் பர்தா அணிய மறுப்பு தெரிவிக்கப் படுகின்றமைதொடர்பில்நாடாளுமன்றஉறுப்பினர்இம்ரான் மக்ரூபிடம்மாணவிகள்பலரும் முறைப்பாடுகள் கையளித்துள்ள நிலையிலேயே அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இதுகுறித்துஅவர்மேலும் தெரிவிக்கையில் –

ஆள் அடையாளத்தை உறுதிபடுத்துவதற்கும் பரீட்சை முறைகேடுகளைத் தவிர்ப்பதற்கும் பரீட்சை மண்டபத்திற்குள்பர்தாஅணிய தடைவிதிக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பரீட்சைமுறைகேடுகளுக்கு பர்தா ஆடை காரணம் என்று கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது .

ஆளடையாளத்தைஉறுதிப் படுத்தும் முறை தொடர்பாக முன் கூட்டியே தேவையான விளக்கங்களை பரீட்சைத் திணைக்களம் பாடசாலைகளுக்கு வழங்கி இருந்தால் தேவையற்றபிரச்சினைகளைக் குறைக்க முடியும்.

திடீரெனதாம்வழக்கமாக அணிந்துவரும் பர்தா ஆடையை நீக்கிக்கொள்ளுமாறு பணிக்கும்போது மாணவிகள் மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர். இந்நிலையில், அவர்களால் பரீட்சையை திருப்தியாக எழுதமுடியாமையால் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

எனவே, மாணவிகளுக்கு உரிய முறையில் பரீட்சை மண்டபத்தில் தெளிவுபடுத்துவதன் ஊடாக அவர்களின் மன உளைச்சலைத் தவிர்க்க முடியும்.

சில பரீட்சை மண்டப மேற்பார்வையாளர்களும், பரீட்சை தொடர்பான அதிகாரிகளும் முஸ்லிம் விரோதப் போக்கில் செயற்படுவதான குற்றச்சாட்டுக்களும் எம்மிடம் முன் வைக்கப் படுகின்றன.

இதுவே தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்குகின்றன.

பர்தாவுக்கான தடையை அனுமதிக்க முடியாது. பரீட்சை மண்டபத்தில் ஏற்படும் இந்த பிரச்சினை தொடர்பில் மாற்றுத் தீர்வொன்றுக்கு செல்லவேண்டியிருக்கிறது. எனவே, இது தொடர்பில் முஸ்லிம் புத்திஜீவிகளுடன் அடுத்தவாரம்சந்திப்பொன்றை முன்னெடுக்கவிருக்கிறோம். அதன்பின்னர் இதுவிடயமாக நாடாளுமன்றம் ஊடாக சிறந்த தீர்வொன்றை பெற்று மாணவர்களின்உரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும்எனநாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் மேலும் தெரிவித்தார். (05)


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555

# இலங்கையில் சக்திவள துறைக்குள் பிரவேசித்துள்ளது சீன அரசாங்கம்

இலங்கையின் ஒட்டு மொத்தவெளிநாட்டுக்கடனான 51 பில்லியன் டொலர்களுக்கும் அதிகமான தொகையில் சீனாவுக்கு 12 சதவீதம் நிலுவை காணப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்நிலையில்தான்,இலங்கையில்சக்திவளத்துறைக்குள்சீனாபிரவேசித்திருக்கின்றது.

இந்த நிலைமை, இலங்கை ஒட்டுமொத்தமாக சீனாவின் பிடிக்குள் சென்றுவிடும் என்ற அச்சமான சூழலைத் தோற்றுவித்திருக்கின்றது. இதனால் இறைமையுள்ள இலங்கையின் எதிர்காலம் எவ்வாறு அமையப்போகின்றதுஎன்பதுதொடர்பில் பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் நடைபெற்று வருகின்றன.

முன்னதாககடந்தமாதம், மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் செயலாளர் எம்.பி.டி. யூ.கே. மாபாபதிரனவும் சினோபெக் நிறுவன எரிபொருள் உற்பத்தி மற்றும் விநியோக திணைக்கள முகாமைத்துவப்பணிப்பாளர் சென் சென்க்மிம் ஆகியோர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு முன்னால் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

அந்த ஒப்பந்தத்தின் பிரகாரம், சினோபெக் மற்றும் அதன் துணை நிறுவனங்கள் இலங்கையில் தமது பெற்றோலிய விநியோகச் செயற்பாட்டில் களமிறங்கவுள்ளன. முதற்கட்டமாக நவீன எரிபொருள் நிரப்பு நிலையங்களை அமைப்பதற்கான அனுமதிகள் வழங்கப்பட்டுள்ள நிலையில் குறித்த அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டு 45 நாள்களுக்குள் செயற்படத்தொடங்கும்என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன்சினோபெக்வருகையின் மூலம் நிலையான மற் றும் நம்பகமான எரிபொருள் விநியோகத்தை உறுதி செய் வதோடு நாட்டின் வலுசக்தித் துறையை மேம்படுத்துவதற்கும் பங்களிக்கும்என்றும்இலங்கை எதிர்பார்கின்றது.சினோபெக் நிறுவனமானது, சீனாவின் மிகப்பெரிய உற்பத்தியாளராகவும் மற்றும் பெற்றோலிய பொருட்கள் மற்றும் சுத்திகரிக்கப்பட்டபெற்றோலிய பொருட்களைவிநியோகிக்கும் செயற்பாடுகள் ஈடுபடுகின்றது.

இது சீனாவின் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல பகுதிகளில்செயற்படும்ஒருங்கிணைந்த எண்ணெய் நிறுவனமாகும். எண்ணெய் ஆய்வுமுதல்சுத்திகரிக்கப்பட்ட பொருள்களின் விற்பனை வரை, எரிபொருள் போக்குவரத்து முதல் இறக்குமதி-ஏற்றுமதி நடவடிக்கைகள் வரை அனைத்திலும் தாக்கத்தைச் செலுத்துவதாகும்.

சினோபெக் சீன மற்றும் சர்வதேசபங்குச்சந்தைகளில் பட்டியலிடப்பட்டுள்ளது, ஆனால் அது சீன அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்பட்டு நிதியளிக்கப்படுகிறது. இந்த நிறுவனம்தனதுஉற்பத்தியை அதிகரிக்கவடிவமைக்கப்பட்ட ஐந்துஆய்வுமற்றும்உற்பத்தி திட்டங்களை உருவாக்கி வருகிறது.

ஷெங்லி எண்ணெய் வயல்,டாரிம்படுகை,ஓர்டோஸ் படுகை, சிச்சுவான் படுகை மற்றும் வழக்கத்துக்கு மாறான எண்ணெய் மற்றும் எரிவாயு இருப்பு ஆகியவை இந்தத் திட்டங்களாகும். இந்தப் பின்னணியைக் கொண்டுள்ள சினோபெக் நிறுவனம் இலங்கையுடன் ஒப்பந்தத்தில்கைசத்திட்டவுடன் சர்ச்சையொன்று வெடித்திருந்தது.

அதாவது இலங்கையில், எரிபொருள் விற்பனை செய்வதற்கு சினோபெக் நிறுவனம் வேறு வெளி நிறுவனங்களை பயன்படுத்துவதாக தகவல்கள் வெளியாகியிருந்தது. எனினும் இந்தத் தகவல்களை நிராகரித்துள்ள சீனாவின் சினோபெக் நிறுவனம் தமது வணிகத்துக்காக மூன்றாம் தரப்பினரைத் தொடர்பு கொள்ளவில்லை என்று குறிப்பிட்டது.

அத்துடன், தமது எரிவாயு நிலையங்களுக்கான சேவை உரிமைகளை வேறு எந்த தரப்பினருக்கும் மாற்ற விரும்பவில்லை என்றும், தனது வர்த்தக நாமத்தின் நற்பெயரைப் பாதுகாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் சினோபெக் நிறுவனம் அறிவித்துள்ளது.

ஆனால், நெருப்பின்றி புகைவராது என்ற கூற்றுக்கு அமைவாக, சினோபெக் நிறுவனத்தின் பிறநாடுகளில் முன்னெடுக்கும்செயற்பாடுகள் பற்றிய பூரணமான ஆய்வு இங்கு அவசியமாகின்றது.

அதுவொருபுறமிருக்கையில், பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ள இலங்கை, அதிலிருந்து மீள்வதற்கு போராடி வருகின்றது. இந்தப் போராட்டத்தில் சர்வதேச நாணய நிதியம் 2.9 பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு முன்வந்துள்ளது. அதன் முதற்கட்டம் வழங்கப்பட்ட நிலையில் இரண்டாவது கட்டத்துக்காக கடன்மறுசீரமைப்பு உள்ளிட்ட விடயங்களை முன்னெடுக்கவேண்டியுள்ளது. ஆனால் கடன் மறுசீரமைப்பு விடயத்தில் சீனாவின் வகிபாகம் மிகவும் பின்னடைவான நிலையில் தான் உள்ளது. இவ்வாறான நிலையில், எரிபொருள் விநியோகத்தில் சீனா பிரவேசிப்பதானது, எதிர்காலத்தில் ஒட்டுமொத்த நாட்டையும் கட்டப்படுத்துவதற்கான நிலைமைகளை உருவாக்கி விடுவதற்கான அச்சமான சூழல்களும் காணப்படுகின்றன.

இலங்கை முழுவதும் சுமார் 211 எரிபொருள் நிரப்பு நிலையங்களை இந்தியாவுக்குச்சொந்தமானலங்காஐ.ஓ.சி நிறுவனம் செயற்படுத்தி வருகின்றது. எனினும், சீனோபெக் ஒப்பந்தத்தின் ஊடாக முதற்தடவையில் 150 வரையிலானஎரிபொருள்நிரப்பு நிலையங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்த எண்ணிக்கை இரண்டாம், மூன்றாம் கட்டங்களில் அதிகரிக்கின்றபோது, இலங்கைக்கான எரிபொருள் விநியோகத்தில் சீனா பிரதான இடத்தை வகிக்கலாம். அவ்வாறான தொருசூழல்ஏற்படுகின்றபோது நாட்டின் இயக்கத்தையே கட்டுப்படுத்தல்ல சக்தியை சீனா பெற்றுவிடும்.

இது, சீனாவின் மூலோபாயநடவடிக்கைகள் அனைத்துக்கும் இலங்கை தலையசைத்துச் செல்ல வேண்டிய நிலைமையை உருவாக்கும் நிலைமைகளையே ஏற்படுத்தும்.

இதனைவிடவும், சீனா, சீனா நஷனல் எனர்ஜி இன்ஜினியரிங் அண்ட் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட் ஊடாக இலங்கையில் 400 மெஹாவோல்;ட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களுக்காக 80 கோடி டொலர்களை முதலீடு செய்வதற்குத் தயாராகியுள்ளது.

ஏற்கனவே சூழலுக்கு ஆபத்துக்களை ஏற்படுத்த வல்ல, நிலக்கரியின் ஊடாக மின்சாரத்தை உற்பத்தியில் சீனாவின் பங்களிப்பு காணப்படுகின்றது.

300 மெஹாவோல் பெறுமதியான மூன்று இயந்திரங்களைக் கொண்ட நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையம், சீனாவிடம் இருந்து பெறப்பட்ட 1.4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் கடனில் அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (05)

# கிழக்கு மாகாண கல்வியியற்கல்லூரி ஆசிரிய நியமனம் கல்வியமைச்சரை சந்திக்கிறார்கள் கிழக்கு எம்.பிக்கள்

நூருல் ஹுதா உமர்

கிழக்கு மாகாண கல்வியியற் கல்லூரி ஆசிரியர், ஆசிரியைகளுக்கான நியமனம் கிழக்கு மாகாணத்துக்கு வெளியே வழங்கப்படவுள்ளதாக கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து அந்த ஆசிரியர் நியமனத்தில் உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காணும் நோக்கில் கடந்த புதன்கிழமை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானைதிகாமடுல்ல மாவட்டநாடாளுமன்றஉறுப்பினரும்,முன்னாள்இராஜாங்க அமைச்சருமானசட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் ஆளுநர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது கிழக்கு மாகாணத்தில் உள்ள ஆசிரியர் வெற்றிடங்கள் தொடர்பிலும், கிழக்குமாகாணகல்வி மேம்பாடுதொடர்பிலும்ஆளுநருடன் கலந்துரையாடிய நாடாளுமன்ற உறுப்பினர் கிழக்கு மாகாண கல்வியியற் கல்லூரி ஆசிரியர், ஆசிரியைகளை கிழக்கிலையே பணிக்கமர்த்த நியமனம் வழங்க வேண்டும் என்று கோரிக்கை முன்வைத்தார். இது விடயமாக கல்வி அமைச்சரிடம் தான் எடுத்துரைத்துஉள்ளதாகவும் இது தொடர்பில் மேலதிக நடவடிக்கைகளை தான் மேற்கொள்ள உள்ளதாகவும் நாடாளுமன்றஉறுப்பினருக்கு கிழக்கு மாகாண ஆளுநர் இதன்போதுஉறுதியளித்தார். அன்றைய தினம் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி. எஸ். ரத்நாயக்கவையும், கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யு. ஜி. திஸாநாயக்கவைம் சந்தித்த நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் இது தொடர்பில் அவர்களிடமும் கோரிக்கை விடுத்திருந்தார். கிழக்கு மாகாணகல்வியியற்கல்லூரி ஆசிரியர், ஆசிரியைகளை கிழக்கிலேயே நியமிப்பது தொடர்பான உயர்மட்ட கூட்டமொன்று இன்று (திங்கட்கிழமை) கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவின் தலைமையில் இடம்பெறவுள்ளதாகவும், இந்தக் கூட்டத்தில் சுற்றாடல் அமைச்சர் எந்திரி இஸட்.ஏ. நஸீர் அஹமட் உள்ளடங்கலாக கிழக்கு மாகாணத்தை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு கிழக்கு மாகாண ஆசிரியர்களுக்கான இடம் பெறவுள்ள அநீதி தொடர்பிலும், கிழக்கு மாகாண ஆசிரியர் வெற்றிடம் தொடர்பிலும், கல்வி மேம்பாட்டு வேலைத் திட்டங்கள் தொடர்பிலும் அழுத்தமாக கோரிக்கை முன்வைக்க உள்ளனர் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரிஸ் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். (05)

# தியாகி பொன். சிவகுமாரனின் நினைவேந்தலுக்கான அழைப்பு




தியாகி பொன். சிவகுமாரனின் நினைவேந்தலின்போது அரசியல் கட்சிகள் எவ்வித அரசியல் பேதமுமின்றி பங்கேற்க வேண்டுமென நினைவேந்தல் குழு அழைப்பு விடுத்துள்ளது.

தியாகி பொன். சிவகுமாரின் 49 ஆவது ஆண்டு நினைவேந்தல் இன்று இடம்பெறவுள்ள நிலையில் நினைவேந்தல் குழுவினரால் இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் உரும்பிராயில் உள்ள அவரது நினைவிடத்தில் தியாகி பொன். சிவகுமாரனின் நினைவேந்தல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் அறிவித்துள்ளது.

நினைவேந்தலில் அரசியல் பேதமின்றி அனைவரும் பங்கேற்க வேண்டும் என்றும் பல்கலை மாணவர்களும் நினைவேந்தல் இடத்திற்கு வந்து அஞ்சலியை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டனர்.

ஈழ விடுதலைப் போராட்ட வீரர்களில் ஒரு முன்னோடியான பொன்.சிவகுமாரன், 1974 ஆம் ஆண்டு பொலிஸாரின் சுற்றிவளைப்பின் போது மரணமடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (05)



காலைக்கதிர் Kalaikkathir

# ஒரு தேசமாக நாம் முன்னேற சட்டத்துறை தொழில்முனை முக்கியத்துவங்களை இனங்காண்பது நாட்டில் அவசியம்

**பைசர் முஸ்தபா கூறுகிறார்**



ஒரு தேசமாக நாம் முன்னேற வேண்டுமானால், சட்டத்துறை தொழில்முனைவின் முக்கியத்துவத்தை அடையாளம் காண்பது முக்கியம் என்று தேசிய சட்டத்தரணிகள் சம்மேளனத்தின் தலைவர் பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

நுவரெலியா கிராண்ட் ஹோட்டலில் நடைபெற்ற 2023/2024 தேசிய சட்ட மாநாட்டில் உரையாற்றிய அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில் -

ஒரு தேசமாக நாம் நெருக்கடியான காலகட்டத்தில் இருக்கிறோம். இது சட்டத்தரணிகள் சமூகத்தை ஒன்றிணைக்கும் மாநாடு மாத்திரமல்ல. நாட்டையும் நாட்டின் பொருளாதாரத்தையும் மீட்பதற்காகக் கொள்கை வகுப்பாளர்கள், அதிகாரிகள் மற்றும் வர்த்தக சமூகத்தினருக்கு இடையேயான கருத்துப் பரிமாற்றத்தின் தொடக்கமாக இந்த மாநாட்டை நடத்த நாங்கள் முடிவு செய்தோம்.

ஒரு தேசமாக நாம் முன்னேற வேண்டுமானால், சட்டத்துறை தொழில்முனைவின் முக்கியத்துவத்தை அடையாளம் காண்பது முக்கியம்.

மேலும், தொழில் மற்றும் தொழில்முனைவோர் சட்டத்தின் ஆட்சியை ஏற்க வேண்டும். இந்த விடயத்தில் நிரந்தரமான தீர்வுகளைக் காண்பதில் அரசியல் தலைமைகளையும் ஈடுபடுத்துவது மிகவும் அவசியம். அப்போதுதான் இந்த மாநாட்டின் வெற்றிகரமான முடிவுகளை எம்மால் பெற முடியும். - என்றார். (05)

# பாதுகாப்புச் செயலாளரை சந்தித்தார் ரொபர்ட் ஃபிலாய்ட்



விரிவான அணு சோதனை தடை ஒப்பந்த அமைப்பின் நிறைவேற்றுச் செயலாளர் கலாநிதி ரொபர்ட் ஃபிலாய்ட், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரத்னவுடன் கலந்துரையாடியுள்ளார்.

இந்த சந்திப்பின் போது இலங்கையில் சுனாமி எச்சரிக்கை மையத்தின் முக்கியத்துவம் தொடர்பாகவும் பயனுள்ள கலந்துரையாடல் இடம்பெற்றதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயமாக இலங்கை வந்திருந்த ரொபர்ட் ஃபிலாய்ட், ஜனாதிபதி, வெளிவிவகார அமைச்சர், சுற்றுச் சூழல் அமைச்சர், புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தின் மூத்த அதிகாரிகளை சந்தித்தும் கலந்துரையாடியிருந்தார்.

1996 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 24 ஆம் திகதி, விரிவான அணுசக்தி சோதனை தடை ஒப்பந்தத்தில் இலங்கை கையெழுத்திட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# கல்லடி சித்திரவேலாயுத சுவாமி ஆலய தீமிதிப்பு

(பழுவூரான்)

கல்லடி சித்திரவேலாயுத சுவாமி ஆலய தீமிதிப்பு இன்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை இடம்பெற்றது.

இத்தீமிதிப்பில் அடியவர்கள் தமது நேர்த்திக்கடனை நிறைவேற்றும் பொருட்டு தீமிதிப்பில் ஈடுபட்டிருந்





தனர். அத்தோடு கல்லடிப் பிரதேசத்தை அண்டிய பகுதிகளிலிருந்து பல நூற்றுக்கணக்கான அடியவர்கள் கலந்து கொண்டனர்.

ஆலய உற்சவக் கிரியைகள் யாவும் ஆலய பிரதமகுரு பால சதீஸ்வரக்குருக்கள் தலைமையில் நிகழ்த்தப்பட்டன.

ஆலய உற்சவம் மே மாதம் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானமை குறிப்பிடத்தக்கது. (05)

# திஸ்ஸ மகா விகாரை தையிட்டியில் பொசன்!



யாழ்ப்பாணம் - காங்கேசன்துறையில் அமைந்துள்ள தையிட்டி திஸ்ஸ மஹா விகாரையில் கடந்த சனிக்கிழமை பொஸன் வழிபாடுகள் இடம்பெற்றன.

வணக்கத்துக்குரிய கிங்தோட்ட நந்தராமவின் தலைமையில் பொஸன் பூஜை வழிபாடுகள் நடைபெற்றது.

பொஸன் வழிபாடுகளில் நாடளாவிய ரீதியில் பல இடங்களிலிருந்தும் வந்த ஏராளமான பௌத்த மற்றும் இந்து பக்தர்கள் கலந்துகொண்டனர்.

இதில் கலந்துகொண்ட அனைவருக்கும் உணவுதானம் வழங்கப்பட்டது. (05)

# வறுமையில் உள்ள தாய்மார்களை பயன்படுத்துகின்றது அரசாங்கம்!

**உறவுகள் கவலை**

காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் எத்தகைய செயற்பாடுகளை முன்னெடுத்தாலும், தாம் ஒருபோதும் அதில் நம்பிக்கை வைக்கப்போவதில்லை என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கம் அறிவித்துள்ளது.

ஆகவே சர்வதேசத்தின் தலையீடின்றி மேற்கொள்ளப்படும் எந்தவொரு விசாரணைப்பொறிமுறையையும் தாம் ஏற்கப்போவதில்லை என்றும் வடக்கு, கிழக்கு வலிந்துகாணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் செயலாளர் லீலாதேவி தெரிவித்துள்ளார்.

காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் செயற்பாடுகள் மீது தமக்கு நம்பிக்கை இல்லை என்றும் குறிப்பாக, தமது சங்கத்தைச் சேர்ந்த 75 சதவீதமானோர் இந்த அலுவலகத்திடம் முறைப்பாட்டை வழங்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் பொருளாதார நெருக்கடியைப் பயன்படுத்தி வறுமையில் உள்ள தாய்மார்களை காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் உள்ளிட்ட அரசதரப்புக்கள் பயன்படுத்திக்கொள்கின்றன எனவும் லீலாதேவி குற்றம் சாட்டியுள்ளார்.

ஆகவே, வலிந்துகாணாமலாக்கப்படல் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த தேவையான உதவிகளை, சர்வதேச நாடுகளும், மனித உரிமைகள் அமைப்புக்களும், புலம்பெயர் தமிழர்களும் வழங்க முன்வரவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (05)

# இலங்கையிலிருந்து முதல் ஹஜ் குழு புறப்பட்டுள்ளது!



நூருல் ஹுதா உமர்

இலங்கையின் ஹஜ் முகவர் நிலையமான சாய்ந்தமருது முல்தஸம் ஹஜ் ட்ரவல்ஸின் 63 யாத்ரிகர்களை உள்ளடக்கிய இலங்கையின் முதல் ஹஜ் யாத்ரிகர்கள் குழு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை, பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் இருந்து புனித மக்கா மாநகர் நோக்கி புறப்பட்டது.

இந்த வருடம் இலங்கையில் இருந்து புறப்படும் முதலாவது குழுவை இலங்கைக்கான



சவூதி அரேபியாவின் தூதுவர் காலித் ஹமூத் அல் - கஹ்தானி விமான நிலையத்தில் வரவேற்று மக்கா நோக்கி வழியனுப்பினார். உலகின் அனைத்து



பகுதிகளிலிருந்தும், ஹஜ் கிரியைகளை நிறைவேற்றுவதற்காக வருகை தரும் ரஹ்மானின் விருந்தினர்களை சவூதி அரசாங்கம் பெரிதும் வரவேற்பதாகவும், இரு புனித ஸ்தலங்களினதும் பாதுகாவலரின் அரசாங்கம் அல்லாஹ்வின் வீட்டிற்கு வருகைதரும் யாத்ரிகர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது என்றும், அவர்களின் வசதியை உத்தரவாதப்படுத்துவதற்கும், தமது ஹஜ் கிரியைகளை மிகவும் எளிதாக நிறைவேற்று வதற்கும் தேவை யான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாகவும் சவூதி அரேபியாவின் தூதுவர் தனது சிறு உரையில் தெரிவித்தார்.

மௌலவி ஏ.எஸ்.எம். சம்சுத்தீனால் கிழக்கு மாகாணத்தில் முதல் முதலாக ஆரம்பிக்கப்பட்ட சாய்ந்தமருது முல்தஸம் ஹஜ் ட்ரவல்ஸ் தனது 59 ஆம் வருட ஹஜ் பயணத்தை மேற்கொள்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. அன்னாரின் மரணத்துக்குப் பின்னர் இந்த முல்தஸம் ஹஜ் ட்ரவல்ஸ் ஆனது அன்னாரின் புதல்வர்களான மௌலவி எம்.எஸ்.எம். சுஹுருத்தீன் மற்றும் எம்.எஸ்.எப்.ஆர். முகத்தஸி ஆகியோர்களால் இயங்கிவருகிறது.

இந்நிகழ்வில், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் இசட். ஏ.எம். பைசல், இலங்கை ஹஜ் கமிட்டியின் தலைவர் இப்ராஹிம் சாஹிப் அன்சார், சமய விவகார அமைச்சின் அதிகாரிகள் மற்றும் இலங்கையின் ஹஜ் முகவர் நிலையங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.06.2023இல் வெளியிடப்பெற்றது.

இத்துடன் நேற்றைய மாலைப்பதிப்பின் பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 04

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 19 ஞாயிற்றுக்கிழமை 04.06.2023 கதிர் 76

# உண்மைக் குழுவை நிறுவுவதற்கான சட்ட வரைவு 3 மாதங்களினுள் வரும்

## அயலுறவு அமைச்சர் தெரிவிப்பு

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் ஆணைக்குழுவை நிறுவுவதற்கானசட்டவரைவுஎதிர்வரும் மூன்று மாதங்களுக்குள் இறுதி செய்யப்படும் என்று அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

இந்த ஆணைக்குழுவிற்குத் தமிழ்க் கட்சிகள் தொடர்ச்சியாக எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றபோதும் அதனை நிறுவியே தீருவது என்று ஆட்சியாளர்கள் அடம் பிடித்து வருகின்றனர்.

"உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினை

2

# நாடு இயல்பு நிலைக்குத் திரும்ப அனைவரது ஒத்துழைப்பும் தேவை

## பிரதம நீதியரசர் தெரிவிப்பு



நாடு இயல்புநிலைக்குத் திரும்புவதற்கு அனைத்துத் தரப்பினரதும் ஒத்துழைப்பும் அவசியம் என்று பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தெரிவித்தார்.

நுவரெலியா கிரேண்ட் ஹோட்டலில் வியாழக்கிழமை நடைபெற்ற '2023/ 2024 தேசிய சட்ட மாநாட்டில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த சில வருடங்களில் பல சவால்களுக்கு மத்தியிலும் சட்டத்தரணிகள் சங்கம் தனதுஉறுப்பினர்களைஒன்று திரட்டி பல்வேறு கருப்பொருள்களின் கீழ் மாநாடுகளை நடத்தியது.

2022ஆம் ஆண்டிற்கான அதன் கருப்பொருள், சட்டத் தொழிலின் இயலுமையை மீள்கட்டமைத்தல் மற்றும் இசைவாக்கமடைதல் அதன் பின்னர் இந்த ஆண்டின் தொடக்கத்தில், ஒரு நெருக்கடியின் ஊடாக பயணித்தலில் – சட்டத்தின் வகிபங்கு என்ற கருப்பொருளின் கீழ் நாங்கள் ஒன்றிணைந்தோம்.

கொரோனா தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக, நாம் அனைவரும் முன்னரில்லாத சிரமங்களையும் சவால்களையும் எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது. ஆனால் இந்த சூழ்நிலையில் இருந்து விடுபட்டு இயல்பு நிலைக்குத் திரும்பவும், முன்னேறவும் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வது நம் அனைவரின் பொறுப்பு என்று நாங்கள் நம்புகிறோம் – என்றார்.

# நீதியான ஆட்சி வேண்டுமென்றால் மகிந்த குடும்பத்தை விசாரியுங்கள்

## ரணில் ஆட்சியிடம் சிறிதரன் எம்.பி. இடித்துரைப்பு



இலங்கைத் தீவிலே ஒரு நீதியான ஆட்சி அமைய வேண்டுமாக இருந்தால், பல ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட மஹிந்த ராஜபக்ச குடும்பம் விசாரிக்கப்படவேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன்.


கிளிநொச்சியில் அமைந்துள்ள அவரது அலுவலகமான அறிவகத்தில் நேற்றுப் பகல் செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மருதங்கேணிப் பகுதியில், மக்கள் முன்னிலையில் அச்சுறுத்தப்பட்டமை இந்த நாட்டின் இனஅழிப்பு நடவடிக்கையின் புதிய வடிவத்தையே காட்டிநிற்கின்றது.

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழர்களைக் கொன்றொழித்து படுகொலைகளைச் செய்த ஜேர் ஆர்.ஜெயவர்தனவின் மருமகனான ரணில் ஆட்சியின் இந்த செயற்பாடானது அதியுச்ச அடக்குமுறையையே காட்டிநிற்கிறது.

2

# ராகுல் காந்தியுடன் மொறகொட பேச்சு



இந்தியாவுக்கான இலங்கை உயர் ஆணையர் மிலிந்த மொறகொட புதுடில்லியில் காங்கிரஸ் மூத்த தலைவர்களில் ஒருவரான ராகுல் காந்தியை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். அண்மையில் நடந்த இந்தச் சந்திப்பில் இலங்கையின் அரசியல் பொருளாதார நிலை தொடர்பில் விரிவான பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்த இரு தலைவர்களும் சில ஆண்டுகளுக்கு முன்னர் உலகப் பொருளாதார மன்றத்தின் இளம் உலகத் தலைவர்கள் மன்ற உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டபோது முதல் தடவையாகச் சந்தித்துக் கொண்டிருந்தார்கள். அந்த நட்புடன் அண்மைய உத்தியோகபூர்வச் சந்திப்பு இடம்பெற்றது.

# மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் தொலைநோக்குள்ள தலைவர் வேண்டும்

## ரணிலையும் வைத்துக்கொண்டு சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் கருத்து

நாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் தொலைநோக்குள்ள தலைமையொன்று அவசியம் என்று சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர், சட்டத்தரணி கௌசல்ய நவரத்ன தெரிவித்தார்.

நுவரெலியா கிரேண்ட் ஹோட்டலில் வியாழக்கிழமை நடைபெற்ற '2023/ 2024 தேசிய சட்ட மாநாட்டில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சம்பிரதாயமாக, தேசிய சட்ட மாநாடு, சட்டத்தொழில் தொடர்பான தினசரி தோன்றும் விடயங்கள் பற்றி கலந்துரையாடவே அர்ப்பணித்துள்ளது. இருப்பினும், இந்த ஆண்டுக்கான தேசிய சட்ட மாநாடு 2023 – 2024 வேறுபட்ட அணுகுமுறையை எடுத்துள்ளது. நாட்டின் தேசிய நலன்களுக்காகவும் சிறந்த எதிர்காலத்திற்காகவும் சட்டத்தரணிகள் சமூகத்தின் வகிபங்கு பற்றி கலந்துரையாட இந்த மாநாட்டை நாங்கள் ஒதுக்கியுள்ளோம்.

இந்த முயற்சியில் பல தரப்பினருடன் நாங்கள் ஈடுபட்டுள்ளோம். முன்னெப்போதையும்விட நமது நாடு, அரசியல் மற்றும் பொருளாதாரச் சவாலை எதிர்கொண்டுள்ளது என்பது இரகசியமல்ல. எனவே, நாட்டில் அத்தியாவசியமான சட்டக் கட்டமைப்பும் சுதந்திரமான நீதித்துறையும் இருப்பது அவசியம்.

சட்டத்தின் ஆட்சியைப் பேணுவதற்கும், நாட்டை எதிர்பார்க்கும் திசையில் நகர்த்துவதற்கும், தொலைநோக்கு மற்றும்ஒழுக்கநெறியுடைய, ஜனநாயகத்தை மதிக்கும் மற்றும் நமது குடிமக்களின் உரிமைகள் மற்றும் நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும், தலைமையொன்று அவசியம்.

எங்கள் தொழில் வரலாற்றில் முதன் முறையாக, சட்டத்துறையில் மறுசீரமைப்பு செய்யவேண்டிய அல்லது திருத்தப்பட வேண்டிய பகுதிகள் குறித்து அனைத்து தரப்பினர்களுடனும் கலந்துரையாட, தேசிய சட்ட மாநாட்டை நாங்கள் ஒதுக்கியுள்ளோம்.

நாட்டின் நீண்டகால அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதைப் போன்று, இலங்கையை வளர்ச்சியடையும் நாட்டிலிருந்து அபிவிருத்தி அடைந்த நாடாகக் முன்னோக்கிக் கொண்டு செல்லும் சட்டங்களை எமது சட்டக் கட்டமைப்பில் அறிமுகப்படுத்துவதற்கும், அதற்காக சட்டங்களை இயற்றுபவர்களுக்கு உந்துதல்களை ஏற்படுத்தத் தேவையான ஆதரவையும் விழிப்புணர்வையும் இந்த மாநாட்டின் மூலம் வழங்குவதே எமது நோக்கமாகும் என்றார்.

# சூரியக் கல படகு இயந்திரத்தின் செய்முறை விளக்கம் வல்லையில்





சூரிய சக்தியில் இருந்து கிடைக்கும் மின்சாரத்தைக் கொண்டு இயங்கும் படகு இயந்திரத்திற்கு முதல்முறையாக வல்வெட்டித்துறைக் கடலில் விளக்க செய்முறை காட்டப்பட்டது.

சூரிய சக்தியிலிருந்து கிடைக்கும் மின்சாரம் மூலம் 13 குதிரைவலுக் கொண்ட இயந்திரத்தினைச் செயற்படுத்தி மீன்பிடிப்படகு இயக்கிக் காட்டப்பட்டது.

ம ண் ெ ண ண் ெ ண ய் பெட்ரோல் டீசல் போன்ற எரிபொருட்களின் தேவை இல்லாமல் வெறுமனே சூரிய சக்தியில் இருந்து கிடைக்கும் மின்சாரத்தை கொண்டு இயங்க வைக்கின்ற மோட்டார் இயந்திரம் மீன்பிடித் தேவைகளுக்கு மிகவும் பயனுள்ள விடயமாக எதிர் காலத்தில் அமையும் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

அரசியல் பிரமுகர்கள் சமூக ஆர்வலர்கள், நிறுவன அதிகாரிகள்,

2

# நீதிபதிகளுடன் ஜனாதிபதி ரணில் விருந்துபசாரத்தில் பங்கேற்பா?

## தவிர்க்கப்படவேண்டியது என்கிறார் சஜித்

என்று, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், எதிர்க் கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவழித்தார்.

திஸ்ஸமகராமவில்நேற்று நடைபெற்ற நிகழ்வென்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தாவது,

ஜனாதிபதியும், நீதிபதிகளும் சந்தித்து விருந்து உபசாரங்களில் பங்கெடுப்பதாகசமூகஊடகங்கள்ஊடாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் காணொளிகளை நாமும் கண்டுள்ளோம்.

அந்தக்காணொளிகளின் உண்மை பொய் தொடர்பில் நான்அறியவில்லை. ஆனால் அவை பொய்யாக இருக்க வேண்டும் என்றே நான் பிரார்த்திக்கின்றேன்.

2



# யாழ். பல்கலைக்குள் நுழைய 31 மாணவர்களுக்குத் தடை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக முகாமைத்துவ மற்றும் வணிக பீட மாணவர் குழுக்களுக்கிடையில் இரு தினங்கள் இடம்பெற்ற மோதல் சம்ப வங்கள் தொடர்புபட்ட 31 மாணவர்களுக்கு பல்கலைக் கழகத்துக்குள் நுழையத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த மோதல் சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் என இனம்காணப்பட்ட இரண்டாம் வருட மாணவர்கள் 16 பேருக்கும், மூன்றாம் வருட மாணவர்கள் 15 பேருக்குமே இவ்வாறு கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும், விடுதி உட்பட பல்கலைக் கழகத்தின் எந்தவொரு பகுதியகளிற்குள்ளும் நுழைவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட மாணவர்களின் மாகோஸ் நிகழ்வுகள் கடந்த 31 ஆம் திகதி புதன்கிழமை முதல் தொடங்கிநடைபெற்றன. அதில் வெள்ளிக் கிழமையும் சனிக் கிழமையும் இரண்டாம் வருட மாணவர்களுக்கும், மூன்றாம் வருட மாணவர்களுக்கும் இடையில் நடைபெற்ற விளையாட்டு நிகழ்வில் ஏற்பட்ட தகராறே கைகலப்பாக மாறி மோதலில் முடிந்துள்ளது.

இதனால் மூன்றாம் வருட மாணவன் ஒருவர் தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று

2

## ராஜபக்ஷக்கள் காலத்திலும் ஐ.தே.க. ஆட்சியிலும்

# ஊழல், மோசடியால் இழந்த பணத்தை திரும்பப் பெற ரணில் முயலவேண்டும்

## இராதாகிருஷ்ணன் எம்.பி. ஆலோசனை



ராஜபக்ஷக்களின் காலத்தில் இடம்பெற்ற ஊழல், மோசடிகளினால் நாடு இழந்த பணத்தை மீளப்பெறுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

அட்டனில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் அனைவரும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவுகளைச் செய்யுமாறு கோரப்பட்டுள்ளனர். உண்மையில் 18 வயதினைப் பூர்த்தி செய்த அனைவரும் வருமானங்களைப் பெறுவதில்லை. அவ்வாறு வருமானங்களைப் பெறுபவர்கள் கூட வரி செலுத்துமளவிற்கு இயலுமை கொண்டவர்கள் அல்லர்.

ஆகவே ஆட்சியாளர்கள் இவ்வாறாகப் பொதுமக்கள் மீது சுமையை ஏற்படுத்தும் செயற்பாடுகளை கைவிட வேண்டும் என்பது எமது கோரிக்கையாகும். இதற்கு மாறாக, முன்னாள் ஜனாதிபதி ராஜபக் வின் காலத்தில் இந்த நாட்டில் நடைபெற்ற மோசடிகள், ஊழல்களின் போது இழக்கப்பட்ட பணத்தினை மீளப்பெறுவதற்கு நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

அதேபோன்று, மத்தியவங்கி மோசடிகளின்போது இழக்கப்பட்ட பொருந்தொகையை மீட்பதற்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# வைகாசி சடங்கில் நேர்த்திகடன் செவ்வாய் காலை திருக்குளிர்ச்சி



(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கில் கண்ணகித்தாயின் வைகாசி திருக்குளிர்த்தி சடங்கின் போது பக்தர்கள் கற்பூரச்சட்டி ஏந்தி பயபக்தியுடன் நேர்கடன் செலுத்தி வருகின்றனர்.

காரைதீவு ஸ்ரீகண்ணகை அம்மன் ஆலயவருடாந்த வைகாசித் திங்கள் திருக்குளிர்த்தி பாடும் முக்கிய சடங்கு செவ்வாய்க்கிழமை அதிகாலை இடம் பெறும். எட்டாம் சடங்கு எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை இடம் பெறும்.

இந்நிகழ்வுகள் அனைத்தும் பண்டைய கலாசார பாரம்பரிய முறைப்படி நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# டெங்கு பரவல் தாக்கத்தை தடுபக்கக் கலந்துரையாடல்

## காரைதீவில் நடந்தது

(நூருல் ஹுதா உமர்)

காரைதீவு பிரதேசத்தில் டெங்கு அபாயத்தை தடுத்தல் தொடர்பான வேலைத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்லல் எனும் கருப்பொருளிலான அவசர கலந்துரையாடல் காரைதீவு பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜன் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் காரைதீவு உதவிப் பிரதேச செயலாளர் எஸ். பார்த்தீபன், உதவி திட்டமிடல் பணிப்பாளர் பீ. இராஜகுலேந்திரன், நிர்வாக கிராம உத்தியோகத்தர், காரைதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஆர்.எஸ். ஜெகத், காரைதீவு பிரதேச சபையின் செயலாளர் டீ. மோகனகுமார், காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் சிரேஷ்ட பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.பைசால் முஸ்தபா, கிராம உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் உத்தியோகத்தர், ஆகியோர்கள் பங்குபற்றினர்.

இதன் போது டெங்கு தொடர்பான சமகால நஷ்ஸ்ரீலவரங்கள் குறித்தும், அவற்றினை கட்டுப் படுத்துவது தொடர்பில் தொடர்புபட்ட நிறுவனங்களின் வகிபாகங்கள் மற்றும் காத்திரமான திட்டங்கள் குறித்தும் தொடர்ச்சியாக டெங்கு அபாயத்தை கட்டுப்படுத்துவது தொடர்பில் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ள குழுக்களின் செயற்பாடுகளை உயிரோட்டமான தாக்குவதற்கான பொறிமுறைகள் குறித்தும் கலந்தாலோசிக்கப்பட்டது.

மேலும் இனந்தெரியாத நபர்களால் குப்பை கூழங்கள் கொட்டப்படும் இடங்கள் என அடையாளப்படுத்தப்பட்ட பகுதிகளான தோணாவினை அண்டிய பகுதிகள், பொது இடங்கள், களப்பு வீதிகள் மற்றும் மூடிய பாதைகள் குறித்தும் விடே கவனம் செலுத்தப்பட்டதோடு குறித்த இடங்களினை மக்கள் பாவனைக்குகந்ததாக மாற்றுவதற்கான சாத்தியமான பொறிமுறைகள் தொடர்பாகவும் முடிவுகள் எட்டப்பட்டன. (05)

# சேனையூர் ஸ்ரீநாகம்மாள் ஆலய வருடாந்த வைகாசிப் பொங்கல்!

(ஹஸ்பர்)

கிழக்கில் வரலாற்றுச் சிறப்பு மிக்க கட்டைபறிச்சான் வடக்குப்பகுதியில் அமைந்த சேனையூர் ஸ்ரீ நாகம்மாள் ஆலயத்தின் வருடாந்த வைகாசிப் பொங்கல் பெருவிழா இன்று (ஞாயிற்றுக்கிழமை) முழுநிலவை முன்னிறுத்தி வரும் கேட்டை நட்சத்திரமும் கடக லக்கினமும் கூடிய காலை 8.00 மணி 53 நிமிட சுபவேளையில் சேனையூர் ஸ்ரீ வருணகுல விநாயகர் ஆலயத்திலிருந்து பாரம்பரிய முறைப்படி மடைப்பெட்டி ஊர்வலம் நாகம்மாள் ஆலயத்தினைச் சென்றடைந்து பக்தி பூர்வமான கிரியையோடு மடைப்பெட்டி வளர்ந்து ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ அ. அரசரெத்தினத்தால் கையேற்கப்பட்டு பொங்கல் பெருவிழா ஆரம்பமானது. இவ் ஆலயம் 120 வருடங்களுக்கு முற்பட்ட பழைமையான ஆலயமாகும்.

வேளை நூல் கட்டுதல், பொங்கல் சாடி வைத்தல், பால்பழப்பூசை,சிவலிங்க நாகதம்பிரானுக்கு புனித மஞ்சள் நீர்வார்க்கும் நிகழ்வும் நடைபெற்றது. நிறைவாக மாலை 3.00 மணிக்கு விடே தீபாராதனைகளுடன் பூசை இடம்பெற்று, ஸ்ரீமகாவிஷ்ணு ஆறுமுகவேல் சகிதம் அம்பாள் திரு உலாவந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பாள். அடியார்களின் நலன் கருதி பஸ்வசதி மூதூரில் இருந்து நாகம்மாள் ஆலயம் வரை ஒழுங்கு செய்யப்பட்டது. மேலும் வழமை போல் ஆலயத்தில் இவ்வருடமும் அன்னதானமும் வழங்கப்பட்டன. (05)



# சர்வதேச புகைத்தல், மது எதிர்ப்பு தினநிகழ்வு சாய்ந்தமருதில் நடந்தது

(நூருல் ஹுதா உமர்)

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்கள வேலைத்திட்டத்தின் ஒரு பகுதியாக 'புகைத்தலிலிருந்து மீண்டதோர் நாடு – மகிழ்ச்சி நிறைந்த புதியதோர் கிராமம்' என்ற தொனிப்பொருளில் மே மாதம் 31ஆம் திகதி தொடக்கம் ஜூன் மாதம் 14 ஆம் திகதி வரையான காலப்பகுதியை புகைத்தல் மற்றும் போதைக்கு எதிரான காலமாகப் பிரகடனப்படுத்தி மக்களுக்கான விழிப்புணர்வும் கொடிவிற்பனை வேலைத் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அதில் ஓர் அங்கமாக சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் பிரதான நிகழ்வு சமுர்த்தி சமூக அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் சமூக அபிவிருத்தி உதவியாளர் யு.எல்.ஜஃபரின் நெறிப்படுத்தலில் சமுர்த்தி தலைமை பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.சி.எம். நஜீம் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக்கும், சிறப்பு அதிதியாக நிதா உல் பிர் நிறுவன பணிப்பாளரும் சமூக சேவையாளருமான இஸட்.எம்.அமீனும் கலந்து கொண்டதுடன் அதிதிகளாக பிரதேச செயலக கணக்காளர் ஏ.ஜே.நுஸ்ரத் பானு, சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் றியாத் .ஏ.மஜீத், சமுர்த்தி வங்கி முகாமையாளர் ஐ.எல்.எஸ்.ஹிதாயா, பிரதம முகாமைத்து சேவை உத்தியோகத்தர் எம்.எம்.சமூன், திட்டமிடல் பிரிவு பிரதம முகாமைத்து சேவை உத்தியோகத்தர் எம்.எஸ்.எம். றியாஸ், பிரதேச சமுர்த்தி சமூதாய அமைப்பின் தலைவரும், ஊடகவியலாருமான எம்.ஐ. சம்சுதீன், பிரிவுக்கான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம மட்ட அமைப்புகளின் தலைவர்கள் பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டிருந்தனர்.

இதில் கிடைக்கின்ற நிதி வறிய பாடசாலை மாணவர்கள், வயோதிபர்களின் நலத்திட்டங்கள், வறிய மக்களுக்கான சுகாதார, குடிநீர் வேலைத்திட்டங்களுக்கு பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. (05)

## யாழ். பல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகிறார்.

இந்தச் சம்பவம் தொடர்பிலான பூர்வாங்க விசாரணைகள் இன்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றன. விசாரணைகளின் முடிவில் சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் என அடையாளப் படுத்தப்பட்ட இரண்டாம் வருட மாணவர்கள் 16 பேருக் கும், மூன்றாம் வருட மாண வர்கள் 15 பேருக்கும் முறையான விசாரணைகள் முடிவுறும் வரை பல்கலைக் கழகத்துக் குள் நுழையத் தடை விதிக் கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மாணவர் வதிவிடம் மற்றும் ஒழுக்கம் தொடர்பான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு விதிமுறைகளுக்கமைவாக இன்றிலிருந்து மறு அறிவித்தல் வரை தடை வதிக் கப்பட்ட மாணவர்கள் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும், விடுதி உட்பட பல்கலைக்கழகத்தின் எந்தவொரு பகுதியினுள் நுழைவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடாதிபதி பேராசிரியர் பா. நிமலதாசன் அறிவித்துள்ளார்.

இநத மோதலை அடுத்து முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட மாணவர்களின் மாகோஸ் வார நிகழ்வுகளும் இடைநிறுத்தப்பட்டன.

## சூரியக் கல .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்றொழி லாளிகள் முன்னிலையில் இந்தச்செய்முறை விளக்கம் காட்டப்பட்டது.

இவ்வாறான தேவை கருதிய கண்டுபிடிப்புகள் அதனுடைய நீடித்து நிலைக்கும் தன்மையை பொறுத்து பாவனையாளர்கள் மத்தியிலே வரவேற்பை பெறும் என்பது வெளிப்படையான உண்மை. எதிர்காலத்தில் கடல் தொழிலாளிகளின் தேவைகள் இந்த இயந்திரம் மூலம் பூர்த்தி செய்யப்படுமாயின், பெரும் எரிபொருள் பிரச்சினைகளில் இருந்து அவர்களை அதுமீளவைக்கும் என்பது இங்கு வருகை தந்திருந்த பலரது கருத்தாகவும் அமைந்திருந்தது.

ஆஸ்திரேலியாவில் வசிக்கும் மணிவாசகம் என்பவரது முயற்சியால் முன்னெடுக்கப்பட்ட இந்த நடவடிக்கையானது கடற்றொழிலாளர்களுக்கு பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

## நீதிபதிக .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும், அந்தக் காணொளிகள் உண்மையானவையாக இருந்தால் அது மிகவும் பாரதூரமானதொரு விடயமாகும். நீதிமன்றத்தின் சுயாதீனத்தினை நாம் பாதுகாக்க வேண்டியுள்ளது.

எனது தந்தை ஜனாதிபதியாக இருந்த காலத்தில் வைபவமொன்றுக்கு அழைக்கப்பட்டிருந்தார். அந்த வைபவத்திற்கு அக்காலத்தில் இருந்த பிரதம நீதியரசரும் அழைக்கப்பட்டிருந்தார். அதேநேரம் எனது தந்தைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்றும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

இதனால் எனது தந்தை பிரதம நீதியரசருடன் நிகழ்வில் கலந்து கொள்வதானது விழுமியங்களுக்கும், ஜனநாயகத்திற்கும் முரணானது என்பதைக்கருத்திற்கொண்டு குறித்த நிகழ்வில் பங்கேற்பதையே தவிர்த்திருந்தார்.

இவ்வாறான நிலையில் தற்போது ஜனாதிபதியுடன் நீதிகள் விருந்துபசாரத்தில் கலந்து கொள்வது உண்மையாக இருந்தால் இந்த நாட்டின் 220 இலட்சம் மக்களின் விருப்பங்களுக்கும் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

தற்காலத்தில் நீதிபதிகள் மிகவும் சிக்கலான நிலைமைக்குள் உள்ளனர். தற்போது முக்கியமான வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. முக்கியமாக உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தி தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும்.

இதேநேரம், நீதிபதிகளுடன் சந்திப்பு இருக்குமாக இருந்தால் நீதிபதிகளை சிரமத்துக்கு உள்ளாக்காது அவ்விதமான சந்திப்புக்களை தவிர்க்குமாறு கோருவதோடு, அதன்மூலம் நீதித்துறையின் சுயாதீனம் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதியிடம் கேட்டுக்கொள்கின்றேன் – என்றார்.

## நீதியான ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அரசாங்கத்தில் பலர் பல்வேறு மோசடிகளில் ஈடுபட்டுள்ளார்கள். மத்திய வங்கியின் பல மில்லியன் கணக்கிலே இதே ரணிலின் ஆட்சியில் கொள்ளையடித்துச் சென்றிருக்கிறார்கள். அதில் குற்றவாளி எனத் தெரிவிக்கப்பட்ட மத்திய வங்கி ஆளுநரைக்கூட இதுவரை கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தவில்லை.

சீனியிலும் தேங்காய் எண்ணெயிலும் ஊழல் மோசடிசெய்தகோத்தாபயவின் குடும்பத்தை கைது செய்து விசாரணை செய்யத் திராணியற்றவர்தான் ரணில். விடுதலைப் புலிகளிடமிருந்து நகைகள் மற்றும் பணத்தை கொள்ளையடித்துவெளிநாட்டு வங்கிகளிலே வைப்பிலிட்டு வைத்திருப்பவர்களுக்கு எதிராக இதுவரையும் எந்த விசாரணைகளும் மேற்கொள்ளப்படவில்லை

மோசடிகள், ஊழல் போன்றவற்றின் மூலம் இருபது தலைமுறைகளுக்குத் தேவையானவற்றை சேமித்து வைத்துவிட்டு இருக்கின்ற மஹிந்தராஜபக்சகுடும்பத்தை விசாரிக்கவும் இந்த ஆட்சி இன்று தயாராக இல்லை. இந்த நாடு எப்பொழுதும்; கொள்ளையடித்தவர்கள், களவெடுத்தவர்களுடைய பக்கத்தில் தான் நிற்கின்றது

இந்தத் தீவிலே ஒரு நீதியான ஆட்சி அமைய வேண்டுமாக இருந்தால் ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட மஹிந்த ராஜபக்ஷ குடும்பம் விசாரிக்கப்படவேண்டும் – என்றார் அவர். (55)

## உண்மைக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உருவாக்குவதில் நாம் அதிக சிரத்தைஎடுத்துவருகின்றோம். ஆணைக்குழுவுக்கான சட்ட வரைவைத் தயாரிக்கும் பணிகள் நடந்து வருகின்றன. மூன்று மாதங்களுக்குள் அதனை முடிக்க எண்ணியுள்ளோம். அனைத்துக் கட்சிகளையும் கொண்ட கூட்டத்தில் அந்த வரைவு தொடர்பில் கலந்துரையாடப்படும். அனைவரின் கருத்துக்களையும்பெற்று அதனை முழுமைப்படுத்துவோம்"


அதன் பின்னரே அந்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்திற்குக் கொண்டுவரப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு – தொலைபேசி இலக்கம் 076 443 8622

# பாலின வன்முறைகளைக் கையாள்வதற்கு சுகாதார மருத்துவமாதுக்களுக்குப் பயிற்சி

(நூருல் ஹுதா உமர்)

பாலின அடிப்படையிலான வன்முறையின் அழுத்தமான பிரச்சினையை நிவர்த்தி செய்யும் முயற்சியாக, பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் பொது சுகாதார மருத்துவ மாதுக்களுக்கான விரிவான பயிற்சித் திட்டம் அண்மையில் நடத்தப்பட்டது. சமூகத்தில் பாலின அடிப்படையிலான வன்முறையின் வழக்குகளுக்கு திறம்படபதிலளிப்பதற்குத் தேவையான அறிவு மற்றும் திறன்களுடன் மருத்துவ மாதுக்



களைத் தயார்படுத்துவதற்காக இந்த பயிற்சி நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

பிராந்திய மனநலப் பிரிவின் நிபுணரான டாக்டர் எம்.ஜே.நௌஃபல் நிகழ்ச்சியின் வளவாளராகக் கலந்து கொண்டார். பயிற்சி அமர்வுகளில் வன்முறை வகைகள், ஆபத்து காரணிகள், உயிர் பிழைத்தவர்களுக்கான ஆதரவு, சட்ட அம்சங்கள் மற்றும் பரிந்துரை அமைப்புகள் உட்பட பல்வேறு தலைப்புகளை உள்ளடக்கிய விடயங்கள் ஆராயப்பட்டன. மேலும் அமர்வுகளில் விவாதங்கள், வழக்கு ஆய்வுகள் மற்றும் கற்றல் மற்றும் திறன் மேம்பாட்டை மேம்படுத்துவதற்கான பங்கு நாடகங்கள் என்பன இடம்பெற்றன. (05)

# தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு கொமர்சல் வங்கியால் கௌரவம்

## முல்லைத்தீவில் நடந்தது





(சண்முகம் தவசீலன்)

2021 ஆம் ஆண்டு தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற முல்லைத்தீவு மாவட்ட மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு கொமர்ல் வங்கி, முள்ளியவளை கிளையினரால் முள்ளியவளை மாஞ்சோலை பகுதியில் உள்ள தனியார் விருந்தினர் விடுதி மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது.

கொமர்ல் வங்கியில் சேமிப்பை மேற்கொண்டிருந்த 2021ஆம் ஆண்டு தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பாடசாலை மட்டத்தில் முதல் 03 இடங்களை பெற்ற மாணவர்களுக்கு முறையே ரூ.10,000, ரூ.7,500, ரூ.5,000 பணப்பரிசுடன், சான்றிதழ்களும்,பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

கொமர்ல் வங்கி, முள்ளியவளை கிளையின் முகாமையாளர் கந்தவனம் சுதனன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு வலயக்கல்வி பணிப்பாளர் ரத்தினம் தமிழ்மாறனும், சிறப்பு விருந்தினராக முன்னாள் முல்லைத்தீவு வலய உதவிக்கல்வி பணிப்பாளர் நமசிவாயம் அருணாசலம் மற்றும் முல்லைத்தீவு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்க தலைவர் சுப்பிரமணியம் ஞானேஸ் வரராசாவும், கௌரவ

விருந்தினராக வீரமங்கை திருமதி அகிலதிருநாயகி ஸ்ரீசெயானந்தபவனும் முல்லைத்தீவு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்க பொது முகாமையாளர் திருமதி சுமித்தா கலியுகனும் கலந்து கொண்டு சாதனையாளர்களுக்கு சான்றிதழ்களும்,பரிசில்களும் வழங்கிக் கௌரவித்தனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# கஜேந்திரகுமார் உயிருக்கு ஆபத்தா? அறிக்கை கோரும் அமைச்சர் டிரான்



தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமாரின் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் விதத்தில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான்அலஸ் உத்தரவிட்டுள்ளார்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தாக்கப்பட்டார் என்பதை ஏற்றுக்கொள்ள மறுத்துள்ள அமைச்சர் இந்த சம்பவம் தொடர்பில் அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

பொலிஸாரிடம் இது தொடர்பாக முறைப்பாடுகள் எதுவும் முன்வைக்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ள அமைச்சர், அது தாக்குதல் சம்பவமில்லை என நான் கருதுகின்றேன் அந்த சம்பவம் குறித்து வீடியோ உள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்த சம்பவம் குறித்து இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறையிட்டுள்ளதாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சண்டேமோர்னிங்கிற்கு தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் விளையாட்டுகழகம் ஒன்றுடன் நான் சந்திப்பில் ஈடுபட்டிருந்தவேளை தான் பொலிஸ் உத்தியோகத்தர் எனத் தெரிவித்த நபர் ஒருவர் என்னைத் தாக்கினார், பொலிஸ் விளையாட்டு சீருடையில் காணப்பட்ட மற்றுமொரு பொலிஸ் உத்தியோகத்தர் என்னை நோக்கி தனது பிஸ்டலை இலக்குவைத்தார் இது தொடர்பாக இலங்கைமனித உரிமை ஆணைக்குழுவிடம் முறையிட்டுள்ளதாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

ஏன் பொலிஸில் முறைப்பாடு செய்யவில்லை எனக் கேள்வி எழுப்பியவேளை நான் நாடாளுமன்ற அமர்வுகள் ஆரம்பமானதும் சபாநாயகரிடம் முறையிடுவேன் எனத் தெரிவித்துள்ள அவர், தனது உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்ற அச்சம் காரணமாகவே பொலிஸ்நிலையத்துக்கு செல்லவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

சம்பவம் இடம்பெற்ற பிறகு அங்கு வந்த சிரேஷ்ட அதிகாரி இந்த சம்பவத்தை நிராகரித்ததுடன் இது பாரதூரமான விடயமல்ல எனத் தெரிவித்தார். என்னைத் தாக்கிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணியாற்றும் அதேவேளை பொலிஸ் நிலையத்துக்கு என்னை வருமாறு அவர்அழைத்தார். எனது உயிருக்கு ஆபத்துள்ளதால் நான் அங்கு செல்ல விரும்பவில்லை. அதனால் சம்பவம் இடம்பெற்ற பகுதியில் பல சாட்சியங்கள் உள்ளதால் அங்கேயே விசாரணைகளை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்தேன் என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். (05)



# கஜேந்திரகுமார் எம்.பி. மீதான தாக்குதல் மிலேச்சத்தனமானது

## செல்வம் எம்.பி. காட்டம்

கஜேந்திரகுமார் எம்.பி. மீதான புலனாய்வாளர்களின் தாக்குதல் முயற்சி தமிழ் மக்களுக்கு விடப்படும் அடுத்தகட்ட அச்சுறுத்தல் என்பதோடு மிலேச்சத்தனமானதுமாகும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரு மான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீது புலனாய்வாளர்கள் தாக்குதல் முயற்சியை மேற்கொள்ள முனைந்தமைக்கு கண்டனம் தெரிவித்து விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில் –

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்கள் குறைகேள் செயற்பாடுகளையும் அரசியல் செயற்பாடுகளையும் முன்னெடுக்கும் போது புலனாய்வாளர்களின் இடையூறுகள் தொடர்ச்சியாக ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

எனினும் இவற்றை பொருட்படுத்தாது நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

தமிழ் மக்களின் காவலர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் செயற்பட்டு வரும் நிலை யில் அவர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் விடும் வகையிலான செயற்பாடுகளை இலங்கை அரசாங்கம் புலனாய்வாளர்களை வைத்து செயற்படுத்த முனைவது தமிழ் மக்களுக்கே இந்த நாட்டில் பாது காப்பு இல்லை என்பதைப் புடம்போட்டுக் காட்டுகின்றது.

இந்நிலையில் கஜேந்திரகுமார் மீதான தாக்குதல் முயற்சிக்கு தகுந்த விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என்பதுடன் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமையை மீறாத வகையில் இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமைய வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (05 - 100)

# மாணவன் கைது



*பாடசாலையில் இருந்து இடை விலகிய மாணவன் ஒருவர் ஹெரோயின் போதைப்பொருள்பாவித்த நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*கைது செய்யப்பட்ட மாணவனை தடுத்துவைத்து நெல்லியடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர்.*

*மேலும் குறித்த மாணவனுடன் போதைக்கு அடிமையாகி உள்ள ஏனைய மாணவர்களைஅடையாளம் கண்டுகொண்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*இவர்களுக்கு போதைப் பொருளை விநியோகம் செய்யும் நபர்களை கைது செய்ய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (05)*

# அரசுக்கு எதிராக அரசியல்வாதிகள் மாத்திரமே போராட்டத்தில் ஈடுபடுவர்

## மக்கள் அல்லர் என்கிறார் பிரசன்ன ரணதுங்க



அரசாங்கத்துக்கு எதிராக நாட்டு மக்கள் எவரும் போராட்டத்தில் ஈடுபடமாட்டார்கள். அரசியல்வாதிகள் மாத்திரமே போராட்டத்தில் ஈடுபடுவார்கள். பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண அரசாங்கத்துக்குமுழுமையானஒத்துழைப்பு வழங்குவார்கள் என வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

கம்பஹா பகுதியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

அரசாங்கத்துக்கு எதிராக எதிர்வரும் எட்டாம் திகதி நாட்டு மக்களை ஒன்றுத்திரட்டுவதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் குறிப்பிட்டுள்ளார். மக்கள் போராட்டத்தை நாங்களும் எதிர்பார்த்த வண்ணம் இருக்கிறோம்.

அரசாங்கத்துக்கு எதிராக நாட்டு மக்கள் எவரும் போராட்டத்தில் ஈடுபடமாட்டார்கள். எரிபொருள், மின்சார விநியோகம் ஆகிய அத்தியாவசிய சேவைகளில் ஏற்பட்ட பாதிப்பால் மக்கள் கடந்த ஆண்டு போராட்டத்தில் ஈடுபட்டார்கள். மக்களின் ஜனநாயகப் போராட்டத்தை மக்கள் விடுதலை முன்னணியினர் கொள்ளையடித்தார்கள்.

பாரிய பொருளாதாரப் பாதிப்பில் இருந்து நாடு தற்போது வழமைக்கு திரும்பியுள்ளது. அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் குறைவடைந்துள்ளன.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகாண்பதற்கு மக்கள் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்குவார்கள். அரசியல்வாதிகள் மாத்திரமே போராட்டத்தில் ஈடுபடுவார்கள்.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னிலை தரப்பினர்கள் ஒட்டுமொத்த மாணவர்களின் எதிர்காலத்தையும் இல்லாதொழிக்கிறார்கள். பலவந்தமான முறையில் தான் பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். – என்றார். (05)

# கடுகண்ணாவயில் 18 வயதான யுவதி கடத்தப்பட்டு பாலியல் துஷ்பிரயோகம்

கடுகண்ணாவ பிரதேசத்தில் 18 வயதான யுவதி கடத்தப்பட்டு நால்வரால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டதாக கடுகண்ணாவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முச்சக்கரவண்டியில் வந்த சந்தேக நபர்கள் குறித்த யுவதியை ஹதரலியத்த பிரதேசத்தில் வைத்து பொத்தபிட்டிய பகுதிக்குக் கடத்திச் சென்று, பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளதாகவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் நான்கு சந்தேக நபர்கள் தன்னை பாலியல் பலாத்காரம் மற்றும் துஷ்பிரயோகம் செய்ததாகவும், முச்சக்கர வண்டிக்குள் வைத்து பாலியல் துஷ்பிரயோகம் இடம்பெற்றதாகவும் பாதிக்கப்பட்ட பெண் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

மேலும், அப்போது சந்தேக நபர்கள் மதுபோதையில் இருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், பாதிக்கப்பட்ட பெண் மருத்துவ பரிசோதனைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய ஒரு சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், அனைவரையும் கைதுசெய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படுவதாகவும் கடுகண்ணாவ பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (05)

# காரைதீவில் டெங்கு அபாயத்தை தடுத்தல் தொடர்பான வேலைத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்லல் தொடர்பில் அவசர கலந்துரையாடல்





(நூருல் ஹுதா உமர்)

காரைதீவு பிரதேசத்தில் டெங்கு அபாயத்தை தடுத்தல் தொடர்பான வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்லல் எனும் கருப்பொருளிலான அவசர கலந்துரையாடல் காரைதீவு பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜன் தலைமையில் இன்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் காரைதீவு உதவிப் பிரதேச செயலாளர் எஸ். பார்த்தீபன், உதவி திட்டமிடல் பணிப்பாளர் பீ. இராஜகுலேந்திரன், நிருவாக கிராம உத்தியோகத்தர், காரைதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஆர்.எஸ். ஜெகத், காரைதீவு பிரதேச சபையின் செயலாளர் டீ. மோகனகுமார், காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் சிரேஷ்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எம்.பைசால் முஸ்தபா, கிராம உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மற்றும் உத்தியோகத்தர்,ஆகியோர்கள் பங்குபற்றினர்.

இதன் போது டெங்கு தொடர்பான சமகால நிலவரங்கள் குறித்தும், அவற்றினை கட்டுப்படுத்துவது தொடர்பில் தொடர்புபட்ட நிறுவனங்களின் வகிபாகங்கள் மற்றும் காத்திரமான திட்டங்கள் குறித்தும் தொடர்ச்சியாக டெங்கு அபாயத்தை கட்டுப்படுத்துவது தொடர்பில் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ள குழுக்களின் செயற்பாடுகளை உயிரோட்டமான தாக்குவதற்கான பொறிமுறைகள் குறித்தும் கலந்தாலோசிக்கப்பட்டது.

மேலும் இனந்தெரியாத நபர்களால் குப்பை கூழங்கள் கொட்டப்படும் இடங்கள் என அடையாளப்படுத்தப்பட்ட பகுதிகளான தோணாவினை அண்டிய பகுதிகள், பொது இடங்கள், களப்பு வீதிகள் மற்றும் மூடிய பாதைகள் குறித்தும் விடே கவனம் செலுத்தப்பட்டதோடு குறித்த இடங்களினை மக்கள் பாவனைக்குகந்ததாக மாற்றுவதற்கான சாத்தியமான பொறிமுறைகள் தொடர்பாகவும் முடிவுகள் எட்டப்பட்டன.

# ஊடகங்கள் மீது அடக்குமுறை அரசின் முயற்சியை முறியடிக்குக

## மக்கள் போராட்ட இயக்கம் ஐ.நாவிடம் முறைப்பாடு

ஒளி, ஒலிபரப்பு ஒழுங்குபடுத்தல் சட்டமூலத்தின் ஊடாக ஊடகங்கள்மீது அடக்குமுறைகளைப் பிரயோகிப்பதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சியில் உடனடியாகத் தலையீடு செய்யுமாறு வலியுறுத்தி மக்கள் போராட்ட இயக்கம் ஐக்கிய நாடுகள் சபையிடம் முறைப்பாடளித்துள்ளது.

ஒளி, ஒலிபரப்பு ஒழுங்குபடுத்தல் சட்டமூலத்தை அறிமுகப்படுத்துவது தொடர்பாக அண்மையில் அமைச்சரவையில் ஆராயப்பட்டதாக ஊடகங்களில் செய்திகள் வெளியானதையடுத்து, அதற்குப் பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

அதன் ஓரங்கமாக மக்கள் போராட்ட இயக்கத்தின் பிரதிநிதிகள் இதுதொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையிடம் முறைப்பாடளித்துள்ளனர்.

ஒளி, ஒலிபரப்பு ஒழுங்குபடுத்த சட்டத்தின் ஊடாக அரசாங்கம் ஊடகங்களுக்கு எதிராக அடக்குமுறைகளைப் பிரயோகிப்பதற்குத் தயாராகிவருவதாகவும், எனவே இவ்விடயத்தில் உடனடியாகத் தலையீடு செய்யுமாறும் அம்முறைப்பாட்டில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள மக்கள் போராட்ட இயக்கத்தின் பொதுச்செயலாளர் சானக பண்டார, ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கை ஓர் உறுப்பு நாடு எனவும், ஆகவே மக்களின் ஜனநாயகத்தை ஒடுக்குவதற்குத் தயாராகிவரும் அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையில் ஐ.நா. உடனடியாகத் தலையிடவேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

பொதுமக்கள் தகவல்களை அறிந்துகொள்வதற்குத் தாம் கொண்டிருக்கும் உரிமையை ஊடகங்களின் வாயிலாகவே அனுபவிக்கின்றனர். இருப்பினும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அவரது அரசாங்கமும் மக்களின் ஜனநாயக உரிமையைப் பறிப்பதற்கு முற்படுகின்றனர் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் 'ஊடகங்கள்மீது ஒடுக்குமுறையைப் பிரயோகிப்பதற்கு அரசாங்கம் பொதுவானதொரு கொள்கையை நடைமுறைப்படுத்த முயற்சிக்கின்றது. ஆனால் சர்வாதிகாரிகளால் எப்போதும் நாட்டை ஆள முடியாது என்பதை அரசாங்கம் புரிந்துகொள்ளவேண்டும். ஏனெனில் அத்தகைய ஆட்சியாளர்களை மக்கள் விரட்டியடித்துவிடுவார்கள்' என்றும் சானக பண்டார எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# மீண்டும் ஒரு ஆணைக்குழு ஏன்?

**போர் முடிந்த பின்னர் அது தொடர்பில் விசாரித்து அறிக்கைகளைத் தயாரிக்கவென பல ஆணைக்குழுக்கள் அரசுத் தலைவர்களால் நியமிக்கப்பட்டிருக்கின்றன. அந்த ஆணைக் குழுக்களுக்கு எல்லாம் எந்த அதிகாரங்களும் கிடையாது. அவை பல ஆண்டுகளைச் செலவிட்டு பல மில்லியன் ரூபாய் பணத்தையும் செலவிட்டு விசாரணைகளை நடத்தி அறிக்கைகளையும் வழங்கியுள்ளன. அவற்றில் முக்கியமானவை மக்ஸ்வெல் பரணகம ஆணைக்குழு, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு.**

**இறுதிப் போர் தொடர்பாகச் சில முக்கியமான விவரங்களை அந்த அறிக்கைகள் வழங்கியிருந்தன. அது முழுமையான விசாரணை அறிக்கைகள் இல்லை என்கிறபோதும், இறுதிப் போரின்போது நடந்தவற்றில் சிலவற்றையாவது பதிவு செய்திருக்கக்கூடிய ஆவணங்களாக எஞ்சியிருக்கின்றன. அந்த அறிக்கைகள் அதைத் தொடர்ந்து செய்யவேண்டிய விவரங்களையும் பட்டியலிட்டிருக்கின்றன. ஆனால் அந்தப் பரிந்துரைகள் எவையும் நிறைவேற்றப் பட்டதில்லை.**

**இப்போது உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றை நியமிக்கப்போவதாக ஆட்சியாளர்கள் ஒற்றைக் காலில் நிற்கின்றார்கள். அதுவும் தென்னாபிரிக்க மாதிரியைப் பின்பற்றி அதனை உருவாக்கப்போகிறார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு உருவாக்கப்பட்டபோது, அதுவும் ஒரு உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு என்றுதான் கூறப்பட்டது. அந்தப் பாணியில் இலங்கையில் உருவாக்கப்படும் ஆணைக்குழு என்று வியாக்கியானப்படுத்தப்பட்டது.**

**18 மாதங்கள் விசாரணை நடத்தி அந்த ஆணைக்குழு வழங்கிய அறிக்கையால் என்ன பயன்? ஆட்சியாளர்களுக்கே விடை தெரியாத கேள்வி அது. அந்த ஆணைக்குழு தனது விசாரணைகளை வடக்கு கிழக்கில் உள்ள அனைத்து மாவட்டங்களில் நடத்தியது. பல அமர்வுகளாக இந்த விசாரணைகள் நடத்தப்பட்டன. அதற்காகப் பெருமளவு பணமும் செலவிடப்பட்டது. கடைசியில் அதன் பயன் என்னவென்று கேட்டால் எதுவுமில்லை என்பதுதான் உண்மை.**

**இப்போது உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு என்று மீண்டும் தொடங்கியிருக்கிறார்கள். தமிழ் மக்கள் அதனை எதிர்க்கிறார்கள். தமிழ் அரசியல் கட்சிகளில் முக்கியமான அனைத்துக் கட்சிகளும் அந்த ஆணைக்குழுவை நிராகரித்திருக்கின்றன. ஏற்கனவே நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களுக்கு ஏற்பட்ட நிலையைக் கருத்தில்கொண்டே அவை இதனை நிராகரிக்கின்றன.**

**உள்நாட்டு விசாரணைகளில் தமிழ் மக்கள் நம்பிக்கையிழந்து பல ஆண்டுகளாகிவிட்டன. இவை கடைந்தெடுக்கப்பட்ட ஏமாற்று வித்தை என்பதை மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். உலக நாடுகளையும் ஐ.நா. போன்ற பன்னாட்டு அமைப்புக்களையும் ஏமாற்றுவதற்காக கொழும்பு போடும் வேடம் என்றே மக்கள் இத்தகைய ஆணைக்குழுக்களை கருத்துகின்றார்கள். இதனை அவர்கள் வெளிப்படையாகத் தெரிவித்த பின்னரும்கூட உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்தேயாவேன் என்று ஆட்சியாளர்கள் அடம்பிடிப்பது ஏன் என்பது புரியவில்லை.**

**மீண்டும் காலத்தையும் பணத்தையும் வீணடிப்பதைத் தவிர வேறு எந்தப் பயனும் இந்த ஆணைக் குழுவால் ஏற்படப்போவதில்லை என்று தெரிந்துகொண்டும் இந்த முட்டாள்த்தனமான காரியத்தை அரசு நிறுத்திவிட்டு, உருப்படியான வேறு வேலையைப் பார்க்கலாம்.**

# உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சட்டவரைவு தொடர்பாக சுமந்திரன் அதிருப்தி



உண்மைமற்றும்நல்லிணக்கஆணைக் குழு தொடர்பில் தயாரிக்கப்பட்டுள்ள புதிய சட்டவரைவு இறுதிக்கட்டப்போரின்போது இடம்பெற்ற வலிந்து காணாமலாக்கப் பட்டவர்களின் விளைவாகத் தமது அன்புக்குரியவர்களை இழந்த சிறுபான்மையின தமிழ்மக்களுக்கான தீர்வு குறித்த குறைந்தபட்ச எதிர்பார்க்கைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தவறியிருப்பதாகத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இறுதிக்கட்டப்போரின்போது வட, கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தினரிடம் சரணடைந்தோர் உள்ளடங்கலாகப் பெருமளவானோர் வலிந்து காணாமலாக்கப்பட்டிருப்பதாகவும், அவர்களுக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையை அரசாங்கம் வெளிப்படுத்தும் அதேவேளை, தமக்குரிய நீதியைப் பெற்றுத்தரவேண்டும் என வலி யுறுத்தி காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் 2000 நாட்களுக்கும்மேல் தொடர்ச்சியான போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் தென்னாபிரிக்காவில் ஸ்தாபிக்கப்பட்டதையொத்த உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை இலங்கையில் ஸ்தாபிப்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், அதுகுறித்து வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ ஆகியோரால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்குக் கடந்த வாரம் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இருப்பினும் அடிமட்டத்தில் எதுவுமே நிகழவில்லை என்று சுட்டிக்காட்டியுள்ள தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன், அவர்கள் சில புதிய சட்டங்களைக் கொண்டுவருவதற்கு முயற்சிக்கின்றார்கள். ஆனால் அது தொடர்பாக அவர்கள் யாருடனும் கலந்துரையாடாமல் இருக்கின்றார்கள்.

உண்மைமற்றும்நல்லிணக்கஆணைக் குழு தொடர்பில் சட்டவரைபொன்றை முன்வைத்த அவர்கள், அது தொடர்பாக அபிப்பிராயம் கூறுமாறு என்னிடம் கேட்டார்கள்.

இருப்பினும் அதுபற்றிக் கூறுவதற்கு எதுவும் இல்லை. அதில் பொறுப்புக்கூறல் குறித்தோ அல்லது மன்னிப்பு அளித்தல் குறித்தோ எதுவும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

மேலும் காணாமல்போனோரின் உறவினர்களில் பெருமளவானோர் இதுவரையான காலப்பகுதியில் குறைந்தபட்சம் 15 ஆணைக்குழுக்களின் முன்னிலையில் ஆஜராகி, தமது உறவுகள் குறித்து சாட்சியமளித்திருக்கின்றனர் என்று குறிப்பிட்டுள்ள சுமந்திரன், இந்த விவகாரம் தொடர்பில் காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றது.

இருப்பினும் அதில் முன்னேற்றங்கள் எவையுமில்லை. பரணகம ஆணைக்குழுவில் முன்னிலையானவர்களே மீண்டும் மீண்டும் அழைக்கப்படுகின்றார்கள் என்று விசனம் வெளியிட்டுள்ளார். (05)

# சரியான தகவலை அதிகாரிகள் வழங்காதமையினால் மக்கள் பிரச்சினையை தீர்ப்பது கடினமாக உள்ளது

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க வருத்தம்

சில அரச அதிகாரிகள் சில மாதங்களுக்கு முன்பு நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுவிற்கும் அதே அறிக்கையை மீண்டும் சில மாதங்களின் பின்னும் சமர்ப்பிக்கிறார்கள் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் எவ்வித புரிதலும் இல்லாத மற்றும் பொறுப்பேற்க முடியாத மற்றுமொரு அதிகாரிகள் குழு கூட்டங்களில் பங்கேற்க வைக்கப்படுகின்றனர் எனவும் அவர் கூறினார்.

அதிகாரிகள் சரியான தகவல்களை வழங்காதபோது, பிரச்சினைகளை தீர்த்து வேலை செய்வது கடினமாகும் என அமைச்சர் வலியுறுத்தினார்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கம்பஹா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் இதனைக் குறிப்பிட்டார். இந்தக் கூட் டம் கம்பஹா மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றது. அங்கு அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு –

டெங்குவை கட்டுப்படுத்துவதே உள்ளூராட்சி நிர்வாகத்தின் முக்கிய பணி. அதற்கு உங்கள் திட்டங்களை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரிடம் கொடுங்கள். அப்போது பொது சுகாதார பரிசோதகர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்.

குறிப்பாகதமதுகடமைகளில்எரிபொருள் நெருக்கடியை எதிர்கொள்வதாக பலர் என்னிடம் தெரிவித்தனர். சுகாதார அதிகாரிகளின் கடமைகளுக்கு எரிபொருள் வழங்குவதற்கு வரம்பு இல்லை. திட்டங்களைக் கொடுத்தால், அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். மேலும், டெங்கு தடுப்பு பணியில் ஈடுபடும் அதிகாரிகளை, வேறு பணிகளுக்கு பயன்படுத்த வேண்டாம்.

சில அரச அதிகாரிகள் முந்தைய ஒருங்கிணைப்புக் குழுவிடம் அளித்த அறிக்கையையே தற்போதும் சமர்ப்பித்து வருகின்றனர். எங்களுக்கு முறையான அறிக்கைகளை கொடுங்கள். அப்போது பிரச்சினைகளை தீர்த்து வேலை செய்யலாம்.

டெங்கு கட்டுப்பாட்டு பணியை தனியாக செய்வது கடினம். ஜனாதிபதி கிராம குழுக்களை அமைத்துள்ளார். அந்த குழுக்களில் கிராம உத்தியோகத்தர்கள் உட்பட அரச உத்தியோகத்தர்கள் உள்ளனர். தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் உள்ளன.

அவற்றுடன் பொது சுகாதார பரிசோதகரை இணைக்கவும். அப்போது இந்த டெங்கு கட்டுப்பாட்டு பணியை நாம் செய்வது இலகுவாக இருக்கும். ஒரே ஒரு அதிகாரிதான் இந்த வேலையை செய்ய வேண்டும் என்றால் அது கடினம். அதுபோல மக்களையும் தொடர்பு கொள்ளுங்கள். மக்கள் பங்கேற்காமல் வேலை செய்யும் போது, குற்றச்சாட்டுகள் வரும்.

மேலும், கொரோனா வைரஸ் திட்டம் தொடர்பாக ஊடக அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன. சமூக வலைதளங்களில் வெளியிடுவதைப் பார்த்து நாமும் பயப்படுகிறோம். இதைப் பற்றி மருத்துவர்கள் ஒரு கதை சொல்கிறார்கள். போராட்டம் தொடங்கும் முன்பே இது போன்ற கதைகள் பேசப்பட்டன. இது மக்களை ஒன்று திரட்டுவதற்காகச் செய்யப்படுகிறது. இதன் பின்னணியில்தொழிற்சங்கங்களும்உள்ளன. எனவே, பொலிசார் இதில் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். மேலும், இந்த சுகாதார நிலைகள் தொடர்பாக, நாட்டின் சுகாதார துறைக்கு தெரியப்படுத்துங்கள். இல்லையெனில், மக்கள் அச்சமடையாத பிரச்சினைகள் ஏற்படும்.

மாகாண சபையின் சில அதிகாரிகள் கூட்டங்களில் பங்கேற்பதில்லை. இதில் சரியான தகவல் தெரியாத, பொறுப்பேற்க முடியாத அதிகாரிகள் பங்கேற்பதால் எந்த பயனும் இல்லை. இதுபோன்ற அதிகாரிகள் தொடர்பாக ஆளுநர் முடிவு எடுப்பார். ஆசிரியர் துறையில் பல பிரச்சினைகள் உள்ளன. மேல் மாகாணத்தில் ஏராளமான ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ளன. அந்த வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை நியமியுங்கள்.

அவர்கள் விருப்பத்துடன் பணிபுரிவார்கள். நிரந்தர நியமனம் வழங்கப்படும் போது அவர்களுக்கு முன்னுரிமை கொடுங்கள். ஆளுநர் இங்கு இருப்பதால் அது தொடர்பில் தீர்மானம் எடுப்போம். இது குறித்து கல்வி அமைச்சரிடம் பேசுவேன். நான் மாகாண சபையில் இருந்த போது அவ்வாறே செயற்பட்டேன். சில வாகன ஓட்டுநர் அனுமதிப் பத்திரம் இல்லாமல் பஸ் ஓட்டுவதாக முறைப்பாடுகள் வருகின்றன. ஓட்டுநர் அனுமதிப் பத்திரம் இல்லாமல் பஸ்கள் ஓட முடியாது. அப்படி ஓடும் பஸ்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்த வேண்டும்.

இந்நிகழ்வில் மேல் மாகாண ஆளுநர் மார்ல் ஆஃப் தி எயார் ஃபோர்ஸ் ரொஷான் குணதிலக்க, கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர், ஒருங்கிணைப்புக் குழு தலைவர் சஹன் பிரதீப் விதான, இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த, நாடாளுமன்ற உறுப்பினர் உபுல் மகேந்திர ராஜபக்ஷ, கம்பஹா மாவட்ட செயலாளசமன் தர்ன பாடிகோரள, பாதுகாப்பு பிரதானிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (05)

# மக்கள் பிரதிநிதிகளுக்கே இந்த நிலை என்றால் தமிழ் மக்களின் நிலையை எண்ணிப்பாருங்கள்

## சந்திரகுமார் சுட்டிக்காட்டுகிறார்

யாழ்ப்பாணம் வடமராட்சியில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீதான தாக்குதல் சம்பவம் நாட்டில் தமிழ் மக்கள் எப்படி நடத்தப்படுகின்றார்கள் என்பதனை தெளிவாக வெளிப்படுத்தி நிற்கிறது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதி ஒருவர் நாட்டில் சுதந்திரமாக செயற்பட முடியாத ஜனநாயக சூழல் காணப்படுகிறது என்றால் அப்பாவி தமிழ் மக்களின் நிலைமையை எண்ணிப்பாருங்கள்? அவர்கள் எப்படி நடத்தப்படுவார்கள் என்பதனை சிந்தித்து பாருங்கள் எனத் தெரிவித்துள்ள அவர் தன்னுடைய மக்களை சந்தித்து அவர்களுடைய குறைகளை, பிரச்சினைகளை கேட்டறிவதற்கு கூட ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு இந்த நாட்டில் சுதந்திரம் இல்லாத நிலைமை வடக்கு கிழக்கில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.



தொடர்ச்சியான கண்காணிப்புக்கள், அச்சுறுத்தல்கள் என்பன தமிழ் மக்கள் மீது யுத்தம் நிறைவுற்று 14 ஆண்டுகள் கடந்தும் இடம்பெற்று வருகிறது. இது இனங்களின் நல்லிணக்கத்திற்கும், நிலையான சமாதானத்திற்கும் ஏற்புடையதல்ல. இவ்வாறான சம்பவங்கள் இனங்களுக்கிடையே குரோதத்தை மேலும் மேலும் வளர்த்துக்கொண்டே செல்லும்.

எனவே இச் சம்வபங்களுக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீதான தாக்குதல் மற்றும் அவரது செயற்பாடுகளுக்கு அச்சுறுத்தல் விடுத்தவர்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (05)